LIBRARIAN'S OFFICE
RECEIVED
21 FEB 2014
LIBRARY
UNIVERSITY OF JAFFNA

28 JUL 2014
PERIODICALS DIVISION

மக்கள் விடுதலை முன்னணியின் உத்தியோகபூர்வ செய்தித்தாள் செய்தி பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது

2014 பெப்ரவரி அணி 09 படை.09
விலை ரூபா 20.00

# செஞ்சக்தி




# நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான
# ஜே.வி.பியின் ஐவகை கொள்கைத் திட்டம்


பெயரலவிலான சுதந்திரத்தின் பின்னர் 66 வருடங்களாக நாட்டை ஆட்சிசெய்த முதலாளித்துவ ஆட்சியாளர்களால் தற்போது நாட்டைத் தள்ளியிருக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வினை வழங்கி நவீன சோஷலிச சமூகத்தை கட்டியெழுப்புவதை குறிக்கோளாக கொண்டு ஐந்துவகை கொள்கைத் திட்டத்தை மக்கள் விடுதலை முன்னணி வெளியிட்டிருக்கிறது.

பெப்ரவரி 02ம் திகதி கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் நடைபெற்ற 07வது தேசிய மாநாட்டில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட இந்த கொள்கைத் திட்டம் 'எமது நோக்கு' என பெயரிடப்பட்டுள்ளதுடன் மக்கள் நேயமுள்ள ஆட்சி, உயர்வான மனித வளம், நவீனமயம் மற்றும் கைத் தொழில் மயமாக்கப்பட்ட நாடு, நியாயமான சமூகம், அடிமையில்லா மனிதன் என ஐந்து வகையாக தலைப்புகளில் உள்ளடங்கியிருக்கிறது. பொருளாதார அபிவிருத்தி, சமூக நீதி, ஜனநாயகம், தேசிய ஒற்றுமை, தேசிய சுதந்திரம் மற்றும் நல்லாட்சியுடனான நவீன சோஷலிச சமூகத்தை நிர்மாணிப்பதே இவ் வேலைத் திட்டத்தின் இலக்காகும்.

தற்போதைய சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளின் காரணமாக பாரிய ஒடுக்குமுறைக்கு உள்ளாகியிருக்கும் பொது மக்கள் இலங்கை சமூகத்தின் மாற்றத்தை கேட்டு குரலெழுப்புகிறது. இந்த நெருக்கடியானது தனிநபர்களை மாற்றத்திலோ வெறும் ஆட்சி மற்றத்தினால் மட்டும் தீர்க்க முடியாதென வலியுறுத்தும் மக்கள் விடுதலை முனன்ணி, இலங்கை சமூகத்தின் பொருளாதார, அரசியல் உடலை ஆழமான விரிவான மாற்றம் நிகழ வேண்டுமெனவும் அதற்காக 'எமது நோக்கு' கொள்கைத் திட்டம் மிகத் தெளிவான மற்றும் நிலையான வழிகாட்டியாகுமெனத் தெரிவிக்கிறது.

பல அரசில் கட்சிகள் சமூக, பொருளாதார, அரச- (தொடர்ச்சி 11)

## ஜே.வி.பி யின் தலைவராக தோழர் அனுர திசாநாயக்க



மக்கள் விடுதலை முனன்ணியின் அரசியல் குழு உறுப்பினர், ஜே.வி.பியின் பாராளுமன்றக் குழுத் தலைவர் தோழர் அனுர திசாநாயக்க 07வது தேசிய மாநாட்டில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவராக ஏகமகதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தோழர் அனுர குமார திசாநாயக்காவை தலைவராக தெரிவு செய்யப்பட வேண்டுமென, மத்திய செயற்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை தலைவர் குழு அங்கத்தவராக தோழர் சோமவன்ச அவர்களால் மாநாட்டிற்கு முன்வைத்ததன் பின்னர் மாநாட்டு அங்கத்தவர்களால் ஏகமனதாக அங்கிகரித்தது.

2000 ஆம் ஆண்டு முதல் மக்கள் பிரதிநிதியாக (தொடர்ச்சி 11)


03 மன்னார் பாரிய புதைக்குழியில் ...


05 மாற்றத்தை கோருகின்ற...


06 இந்த கட்சியே எமது உயிர். சாவதும் இந்தக் கட்சிக்காவே...


08 மக்கள் விடுதலை முன்னணியின்...

நீதியான தேசம், நேர்மையான சமுதாயம், அடிமையில்லாமனிதன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரஜைகளின் பொறுப்பினை முதன்மையாக கொண்ட போராட்ட இயக்கத்தை கட்டியெழுப்புவோம்

**தேசிய தொழிற்சங்க மத்திய நிலையம் தலைவர் கே.டி லால்காந்த**

நாங்கள் ஒரு தொழிற்சங்க இயக்கம் என்ற வகையில் அண்மைக் காலங்களில் பல போராட்டங்களை வழிநடத்தியிருக்கிறோம். பல போராட்டங்களை வெற்றியாகவும் முடித்திருக்கிறோம். அதேபோன்று சில போராட்டங்களை அப்போதைய சூழலில் வெற்றியடைய முடியாது போன போதிலும், அந்த சகல போராட்டங்களும் வெற்றிகரமான போராட்டங்கள் என்றே நாங்கள் கருதுகின்றோம். காரணம் ஒரு போராட்டத்தில் நோக்கத்தை அப்போதே அடைவது என்பது மட்டுமல்ல அப்போராட்டத்தின் குறிக்கோள். அதேபோன்று எமது தொழிற்சங்க இயக்கம் தனி தனியாகவும் தொழிற்சங்க போராட்டங்களை வழிநடத்துகிறது. அதன்போது குறிபிட்ட தொழிற்சங்கங்களுக்கு உரிய தொழில் துறையை சார்ந்தவர்களுக்கு வெற்றிகளை கொண்டு வந்திருக்கிறது.


ஆனால் போராட்டங்களின்போது நன்மைகளைப் போலவே குறைபாடுகளை பற்றியும் கடந்த காலம் முழுவதிலும் பேசப்பட்டது. அதனால் தான் எல்லோருக்கும் பொருத்தமான பொதுவான போராட்டங்களை முன்னெடுப்பது எப்படி? வேறு வடிவத்தில் கூறுவதென்றால் துறைமுக ஊழியர்களின் உரிமைகளுக்காக வீதிய-ில் இறங்கும் மின்சார சபை ஊழியர்களைப் போன்றே மின்சார சபை ஊழியர்களின் உரிமைகளுக்காக போராடுவதற்கு வீதிக்கு இறங்கும் துறைமுக ஊழியர்களையும் கட்டியெழுப்ப வேண்டும். மற்றைய துரைகளிலும் அவ்வாறே செய்தாக வேண்டும். அதாவது உழைக்கும் மக்கள் அரச, தனியார், பெருந்தோட்டம் என பிரிக்கப்பட்டுள்ளனர். அதேபோன்று தொழில் ரீதியாகவும் பிரிக்கப்பட்டுள்ளனர். அதேபோன்று ஒவ்வொரு தொழில் துறைகளிலும் வகுப்புகளாக பிரிக்கப்பட்டுள்ளனர். அதனால் உழைக்கும் மக்களிடையே விரிவான தேவைகளின் நிமித்தமாக போராளிகள் உருவாவதில் தடையாக அமைந்திருக்கிறது. இந்த நிலையில் உழைக்கும் மக்கள் விவசாயிகளுக்காக, மாணவர்களுக்காக, பெண்களுக்காக, போன்றே ஏனைய மக்களின் தேவையின் நிமித்தமாக போராடுகின்ற நிலைக்கு கொண்டுவருவதே தற்போதைய தொழலாளர் இயக்கத்தின் சவாலாக ஏற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறு ஏற்றுக் கொண்டால் மட்டுமே நாம் ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தில் வெற்றிபெற முடியும். அதனால் நாங்கள விரிவான மக்கள் சக்தியை உருவாக்குவதற்கு முயற்ச்சித்து வருகின்றோம்.

அதற்கான தடைகளை தாண்டி முன்னோக்கி செல்வதாக நாங்கள் நம்புகின்றோம். இப்போது நாம் தடைகளைத் தாண்டியுள்ளோம். எனவே எதிர்காலம் தெளிவானது. நாங்கள் எந்த தொழிலில் இடுபட்டாலும் பொதுவாக நாங்கள அனைவரும் நாட்டு பிரசைகள் என்பதால், நமக்கு பிரசைகளின் பொறுப்பிருக்கிறது. மாணவர்களின் கல்வி உரிமையை பாதுகாப்பது



பிரசைகளின் பொறுப்பாகும். தொழில் அற்ற இளைஞர் யுவதிகளுக்காக போராடுவது பிரசைகளின் பொறுபப்பாகும். அதேபோன்று வைத்திய சாலையில் மருந்துக்களை பெற்றுக் கொள்வதற்க, பாடசலை பௌதீக வளங்கள், மனித வளங்களை பெற்றுக் கொள்வதற்காக, வீதியை போக்குவத்திற்கு சரியான முறையில் புனரமைப்திலிருந்து, தொழில் உரிமைகளுக்காக போராடுவது வரையில் அனைத்தும் பிரசைகளின் உரிமை என்றே நாங்கள கருதுகிறோம். அவ்வாறு பிரசைகளின் போராட்டத்தை முதன்மையாக கொண்ட போராட்ட இயக்கத்தை கட்டியெழுப்புவதன் மூலமாக பொதுமக்கள் முகம் கொடுக்கும் ஒடுக்குமுறையிலிருந்து அவர்களை மீட்க முடியுமென்று நாங்கள் நம்புகிறோம். அந்த திடமான நம்பிக்கை எங்களுக்கிருக்கிறது. அதற்காக எதிர்காலத்தில் அவ்வாறான செயற்பாட்டிற்கு முழு நாட்டையும் உட்படுத்துவதே எமது நோக்கமாகும்.

# பொருளாதார கொளையாளி ஜயசுந்தரவா? ராஜபக்ஷ குடும்பமா?



ஹெல உருமய, தேசிய சுதந்திர முன்னணி என்பது மகிந்த ராஜபக்ஷவின் அரசியல் கொந்திராத்துகார்களாகும். புதையல் தோண்டுவதை நியாயப்படுத்துவதற்கான பொறுப்பை எல்லாவல தேரரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கல்வித் துறையின் சீரழிவுக்கு பொறுப்பானவர் மகிந்தர் அல்ல பந்துல குணவர்தனாவாகும் எனற கொந்திராத்தை கம்மன்பிலவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதேபோன்று நாடு எதிர்கொண்டிருக்கும் பாரிய பொருளாதார நொருக்கடிக்கு பொறுப்புக் கூறவேண்டியவர் மகிந்த ராஜபக்ஷ அல்ல, நிதியமைச்சு செயலாளர் என நிருபிக்கும் கொந்திராத்தை தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்சவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவர் அதற்காகவும் மகிந்தரை தூய்மைபடுத்துவதற்காகவும், பாரிய கருத்தினை வளர்க்க முயன்றபோதிலும், தோன்றியுள்ள பாரிய பொருளாதார நெருக்கடியின் காரணமாக அதை நிருபிக்க முடியாது போயுள்ளது. நாட்டின் தேசிய வருமானத்தில் எண்ணூற்றி ஐம்பத்தி ஏழு கோடி ரூபாய் (857,0000000) நிதியமைச்சரான மகிந்த ராஜபக்ஷாவுக்கு வரவு செலவில் ஒதுக்கப்பட்டுள்ளது. அத்தொகை ஒரு நாளைக்கு மாத்திரம் இரண்டு கோடியே முப்பத்து நான்கு இலட்சமாகும். பட்டதாரி ஒருவரின் மாதாந்த சம்பளம் பத்தாயிரத்தையும் விட குறைவு. ஆனால் மகிந்தரின் ஒரு நிமிடத்திற்கான செலவு (16,250) பதினாறாயிரத்து இருனூற்றி ஐம்பது ரூபாவாகும்.

வருடத்தில் 365 நாட்களும் உழைக்கின்ற மக்கள் அதிகமான வரிகளை செலுத்தி வறுமையில் உழல்கின்ற போதிலும், முழு வருடத்திற்கும் ராஜபக்ஷ குடும்பத்திற்கு உணவினை பெற்றுக்கொடுப்பது எதுவிதமான அறவீடும் இன்றியாகும். 105 அமைச்சர்களைக் கொண்ட பாராளுமன்றததில் கடந்த வரவு செலவுத் திட்டத்தில் 60 வீதத்தை மகிந்த, பசில், கோட்டா ஆகியோரின் அமைச்சுகளுக்கே ஒதுக்கப்பட்டிருக்கிறது. நொரச்சோலை, உமா ஓயா, மொறகாகந்த, சம்பூர் அனல் மின் நிலையம் மத்தள விமா நிலையம், அம்பாந்தோட்டை துறைமுகம், ஆகிய தோலிவியடைந்த திட்டங்களுக்காக பல கோடி ரூபாய் பணத்தை விரயமாக்கியது ராஜபக்ஷ குடும்பத்தாரின் தனி விருப்பத்திற்கு ஏற்றவாராகும் பாடசலைக்கு அணிவதற்கு இரண்டு செருப்புக்களை வாங்குவதற்கு 600 ரூபாய் இல்லாத மாணவிகள் தற்கொலை செய்து கொள்கின்றபோது ராஜபக்ஷவின் இளைய மகனின் சப்பாத்து ஜோடிக்காக ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் விரயமாக்குவதன் மூலமாக மக்களின் பணத்தை சூரையாடும் பொருளாதார கொளையாளி யாரென்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செஞ்சக்தி

மக்கள் விடுதலை முன்னணியின் உத்தியோகபூர்வ செய்தித்தாள்



464/20 பன்னிபிட்டடிவீதி பெலவத்த,பத்தரமுல்ல,இலங்கை
011-2785545, 0112785612
E-mail sensackthynews@gmail.com


## துணிச்சலுடன் முன்னோக்கி செல்வோம்!

தற்போது மக்கள் விடுதலை முன்னணி 07வது தேசிய மாநாட்டை மிக வெற்றிகரமாக நடத்தியுள்ளது. மக்கள் விடுதலை முன்னணியில் மீண்டும் பிளவு ஏற்பட போவதாகவும், உள்ளக நெருக்கடி உக்கிரமடைந்திருப்பதாகவும், அதனை மறைபப்தற்காகவே மாநாட்டை நடத்துகிறதெனவும், எதிரிகளால் கொண்டுச் செல்லப்பட்ட பொய்யான பரப்புரைகள் அனைத்தையும் தோற்கடித்துவிட்டு கட்சியின் ஒழுக்கம், கூட்டுறவு, கட்சியின் தோழமை மற்றும் கட்சியின் போர்குணத்தை வெளிப்படுத்தி அபிமானமிகு மாநாட்டை நடத்தி முடிந்தமையானது கடசிக்கு கிடைத்த பாரிய வெற்றியாகும்.

எமது நாடு முகம்கொடுக்கின்ற பாரிய சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கலாசார நெருக்கடிக்கு தீர்வினைத் தேடுவதற்கான சவாலை வென்றெடுப்பதற்கு பல நடவடிக்கைகளை இந்த மாநாடு முன்னெடுத்தமை விஷேடம்சமாகும்.

தேசிய மற்றும் சர்வதேச அரசியலுக்கு உரிய பிரேரணைகளும், இலங்கையில் தற்போது வங்குரோத்டைந்ததும் பின்தங்கியதுமான முதலாளித்துவ முறைமைக்குப் பதிலாக அதற்கு மாற்றீடாக கட்டியெழுப்படும் நவீன சோஷலிச சமூகத்திற்காக "எமது நோக்கு" எனும் கொள்கைத் திட்டத்தை நிறைவேற்றிய மாநாடு, கட்சித் தலைமைத்துவத்தையும் விரிவுபடுத்தி புதுபித்துள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் 07வது தேசிய மாநாடு பல விடயங்களில் முக்கியத்துவம் வாய்ந்துள்ள. ஒன்று தற்போதைய இலங்கையானது வரலாறு காணாத பாரிய பொருளாதார, அரசியல், சமூக, காலாசார நெருக்கடியில் அமிழ்ந்துப் போயிருக்கிறது. அதற்கு இனியும் இடைக்கால தீர்வுகள் தீர்வாக அமையபோவதில்லை. அது ஆழமான சமூக மாற்றத்தையே கோரி நிற்கிறது. ஆனால் அது அவ்வாறு இருக்கும்போது இலங்கை முதலாளித்துவ வர்க்கம் மற்றும் சந்தர்ப்பவாத குழுக்கள் குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க எத்தனிக்கின்றனர். அதாவது எளிமையான மாற்றத்திற்காக மக்களின் கருத்துக்களை திசைதிருப்புவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். அதாவது சமூக மாற்றத்திற்கு தடை போடுகின்றனர். இந்த நிலமைகளை நன்கு விளங்கிக் கொண்டு அதை தோற்கடித்து அதாவது மக்களை படுகுழியில் தள்ளும் அரசியலிலிருந்து மீட்டு, அவர்களை சரியான கொள்கைத் திட்டத்தின் கீழ், சரியான தலைமத்துவத்தின் கீழ் அணிதிரட்டுவது அத்தியாவசியமாகும். 07வது மாநாடு முக்கியம் நிறைந்திருப்பது அந்த சவாலை வெல்லும் அர்த்தத்திலாகும்.

சமூக மாற்றத்திற்கு தேவையான நிலமைகள் பற்றி தோழர் ரோகண விஜேவீர "எம்மை அழித்தாலும் எமது குரல் ஓயாது" எனும் நூலில் இவ்வாறு கூறுகிறார், அவற்றை சுறுக்கமாக கூறுவதென்றால் இவ்வாறாகும். அடிப்படையாக உற்பத்திச் சக்திகளுக்கு இனியும் பயன்தக்க முறையில் செயற்பட முடியாதபோது சமூகத்தில் தோன்றும் நெருக்கடியே அதன் அடிப்படையாகும். இரண்டாவதாக ஆளும் வர்க்கம் முகம் கொடுத்திருக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வின்மையாகும். மூன்றாவதாக பொது மக்களால் நெருக்கடிகளை சகித்துக் கொள்ள முடியாது பெரும் அழுத்தங்களுக்கு உள்ளாதல். நான்காவதாக சமூக முறைமையை மாற்றுவதற்காக மக்களுக்கு இருக்கும் விருப்பமும் துணிச்சலுமாகும். கடைசியாக ஐந்தாவதாக சமூக சக்திகளின் செயற்பாடுகளை புரிந்துக் கொள்வதற்கான பயிற்ச்சியும் சமூக அசைவுகளின் திசையை இனங்கண்டு கொள்வதற்கு போதுமான பெரும்பான்மையினரின் கருத்துக்களை அடிபணியச் செய்வதற்கு சிறுபான்மையினருக்கு இடமளிக்காத திடசங்கற்பம் பூண்டுள்ள பாட்டாளி வர்க்க புரட்சிகர கட்சியின் இருப்பாகும்."

"ஒரு புறத்தில் ஆளும் வர்க்கம் பழைய வடிவில் வாழ்வதற்கும் ஆட்சியை கொண்டுச் செல்வதற்கும் முடியாமையையும் அதாவது "மேலிருந்து வரும் நெருக்கடியும் மறுபுறத்தில் பழைய வடிவில் வாழ முடியாத பாட்டாளி வர்க்கத்தின் வெறுப்பும், அதாவது 'கீழலிருந்து எழும் நெருக்கடியும் சமூக புரட்சிக்கு தேவையான புரட்சிகர நிலமைகளுக்கான அகநிலைக் காரணியாகும்."

நமது சமூகம் எதிர்கொண்டிருக்கும் தற்போதைய நெருக்கடியும் எதிர்காலத்தில் மேற்காணும் நிலமை தோன்றாதென எவருக்கும் எதிர்வுகூற முடியாது. அதற்காக மக்களை தயார்படுத்த வேண்டும். கட்சி தயாராக வேண்டும். 07வது தேசிய மாநாடு அதற்கமையவாகும். அது நிறைவேற்றிய கொள்கைத் திட்டம் அதற்காகவாகும். பிரேரணைகள் அதற்காகவாகும். இப்போது தலைமைத்துவம் உள்ளிட்ட உறுப்பினர்களின் கடமை பொறுப்பாக இருக்க வேண்டியது, இவை அனைத்தையும் பயன்படுத்திக் கொண்டு வெற்றிவரை தளராது பயணிப்பதாகும். ஒரு ரஷ்ய கருத்தின்படி "சிறந்ததற்கு பதிலாக சிறந்ததை பெற்றுக்கொடுப்பதற்கு எவராலும் முடியும். ஆனால் கூடாதவற்றுக்கு பதிலாக சிறப்பானவற்றை பெற்றுக் கொடுப்பதற்கு துணிவுமிக்கவர்களால் மட்டுமே முடியும்." இது அதற்கான காலமாகும்.

## மன்னார் பாரிய புதைககுழியில் மறைக்கப்பட்ட மனிதர்களுக்கு நியாயம் வேண்டும்.



மன்னார் மாந்தை திருக்கேதிஸ்வரம் பிரதேசத்தில் இன்றுவரை 55 க்கும் அதிகமான எலும்புக் கூடுகளும் மண்டை ஓடுகளும் கண்டுபிடிக்கப் பட்டிருப்பதாக தெரிய வருகிறது.

இந்த சம்பவமானது மாத்தளையில் கூட்டுப் புதைக் குழிகளிலிருந்து 150திற்கு அதிகமான எலும்புக் கூடுகளும், மண்டை ஓடுகளும் கண்டுபடிக்கப்பட்டது யாவருக்கும் தெரிந்த விடயமாகும். அதே போன்றதொரு சம்பவமே இன்று மாந்தை பகுதியில் இடம்பெற்று வருகிறது. இது மிகவும் கவலைக்கிடமான நிலமையாகும்

கடந்த டிசம்பர் 20 ஆம் திகதி திருக்கேதீஸ்வரம் பிரதேசத்தில் தண்ணீர குழாய் அமைப்பதில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களால் 03 மண்டை ஓடுகள் கண்டுபடிக்கப்பட்டதுடன் இப்பிரதேசம் முழு நாட்டு மக்களினதும் கவனத்தை ஈர்த்தது. அதன் பின்னர் இது தொடர்பாக மேற்கொண்ட அகழ்வின்போது எலும்புக் கூடுகளும், மனித எச்சங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது மனிதர்களை கொன்று அநீதியான வழியில் புதைக்கப்பட்ட கூட்டு புதைக் குளிகலெனத் தெரிய வருகிறது.

தெற்கில் என்றாலும் வடக்கில் என்றாலும் புதைக்கப்பட்டுள்ள மனிதர்களுக்கு நீதியும் நியாயத்தையும் நிலைநாட்டப்பட வேண்டும். சிறுவர்களின் உடல்கள் என சந்தேக்கிக்கப்படக் கூடிய எச்சங்களுடனான மண்டை ஓடுகளும் கண்டுபிடிக்கப் பட்டிருப்பதாக தெரிய வருகிறது. அவை அனைத்தும், துப்பாக்கி ரவைகளால் துளைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது. அதனால் இப் புதைக் குழியானது மனிதாபிமானமற்ற படுகொலைகளின் கூட்டு நடவடிக்கையெனத் தெரிய வருகிறது. இது இப் பகுதியில் இடம் பெற்றிருக்கும் மனித படுகெலைகளில் ஒரு சிறு துளியாகும்.

இந்தப் பிரதேசம் கடந்த காலங்களில் இடைக்கிடையே பலராலும் நிருவகிக்கப்பட்டு வந்துள்ளதாக கூறப்படுகிறது. இப்போது இந்த அரசாங்கத்தினர் இந்த உடல்கள், அல்லது எலும்புக் கூடுகள் புலிகள் அமைப்பினால் அல்லது இந்திய சமாதான படைகளினால் கொல்லப்பட்ட அப்பாவி மக்களின் உடல்களாக இருக்கலாமென கூறப்படும்போது இன்னுமொரு சாரார் அரச பாதுகாப்பு படைகளே இதற்கு பொறுப்புக் கூறியாக வேண்டுமென கூறுகின்றனர். எப்படியாயினும் முக்கியமான விடயம் என்னவெனில், ஒருவருக்கொருவர் பரஸ்பர குற்றச்சாட்டுகளை சுமத்துவதற்காக இதை பயன்படுத்துவதை விடுத்து, அதுபற்றிய உண்மையை கண்டறிந்து குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதே சிறந்ததாகும்.


எவ்வாறாயினும் இந்த சம்பவம் தொடர்பாக அரசாங்கத்தின் பங்களிப்பு மிக கவலையளிக்ககூடிய வகையிலேயே அமைந்திருக்கிறது. உதாரணமாக மாத்தளையில் 150ற்கு அதிகமான மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டபோது நாங்களும் பல அமைப்புகள், மற்றும் ஊடகங்கள் அனைத்தும், மக்களினதும் பாரிய எதிர்ப்பின் மத்தியில் அரசாங்கம் அதுபற்றி தேடுவதற்காக ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை அமைத்தது. இன்று அந்த ஆணைக்குழு காணாமல் போனவர்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. மக்களின் கவனத்தை திசைதிருப்புவதைத் தவிர இவ்வாறான ஆணைக்குழுக்கள் அமைப்பதால் நடக்கபோவது ஒன்றும் கிடையாது.

இன்று தேவைபடுவதெல்லாம், சட்டத்தை நடைமுறைபடுத்தும் துறையினரால் பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தி செல்வதற்குப் போதுமான வசதிகளை செய்து கொடுப்பதேயாகும். அதற்கு எதிராக இருக்கும் தடைகளை அகற்றியெறிய வேண்டும். அதனால் இந்த மன்னார் திருக்கேதீஸ்வர மனித புதை குழிகளை பற்றி பக்கச்சார்பற்றதும், துரிதமானதும் நியாயமான விசாரணை நடத்தி இறந்தவர்களுக்கு நீதியையும் நியாயத்தையும் வழங்கும்படி நாம் அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசாங்கம் தோல்வி இ.போ.ச தொழிற்சங்கத்திற்கு வெற்றி

**அகில இலங்கை போக்குவரத்து சேவைகள் சங்கத்தின் செயலாளர் தோழர் சேபால லியனகே**



ஒன்றிணைக்கப்பட்ட நேர அட்டவணையை செயற்படுத்துவதற்கு போக்குவரத்து அமைச்சர் மேற்கொண்ட முயற்ச்சியை இ.போ.ச தொழிற்சங்கங்கள் தோற்கடித்துள்ளது. தனியார்துறை போக்குவரத்துச் சேவைகளின் முன்னால் இ.போ.சவை முடமாக்கும் அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு எதிராக அ.இ போக்குவரத்து சேவைகள் சங்கம் உள்ளிட்ட அனைத்து ஊழியர்களும் கொண்டுச் சென்ற போராட்டத்தின் பயனாக இது வாபஸ்பெறப் பட்டதாக அ.இ.போக்குவரத்து சேவைகள் சங்கத்தின் செயலாளர் தோழர் சேபால லியனகே தெரிவித்தார்.

கடந்த காலங்களில் பல சந்தர்ப்பங்களில் போக்குவரத்து அமைச்சர் இந்த நேர அட்டவணையை செயற்படுத்த முனைந்திருந்தார். தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு அவர் வழங்கிய போலி வாக்குறுதிருகளையும் பல முரண்பாடான நடவடிக்கைகளையும் எடுத்திருப்பதாகவும் தோழர் சேபால தெரிவித்தார். இது நடைமுறைபடுத்தப் பட்டிருக்குமானால் இ.போ.சவின் மரணத்தை துரிதமாக்கும் செயலாகவே முடிந்திருக்குமென அவர் மேலும் தெரிவித்தார். இந்த தீர்மானத்தை தோற்கடிக்க முடிந்தமையானது இ.போ. ச ஊழியர்களைப் போலவே முழு நாட்டு மக்களினதும் வெற்றியாகுமென தோழர் சேபால லியனகே 'செஞ்சக்தி'க்குத் தெரிவித்தார்

## திருட்டு பொருட்களுக்கு அல்ல திருடர்களுக்கே தண்டனை வழங்க வேண்டும்

**இலங்கை புகையிரத ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் சுமதிபால மானவடு**



முன்னாள் போக்குவரத்து அமைச்சர் டலஸ் அலகப்பெரும, தற்போதைய போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம ஆக-யோரினால் பல சந்தர்ப்பங்களில் சமயாசமய அடிப்படையில் புகையிரத திணைக்களத்திற்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட ஊழியர்களின் தொகை 2000திற்கும் அதிகமாகும். இப்போது அவர்களுக்கு நான்கு வருடங்கள் கடந்திருந்தபோதிலும், தொழில் நிரந்தரமாக்கப் படவில்லை அவர்களது தொழில் ஆபத்தையும், வாழ்க்கை நிச்சியமற்ற தன்மையையும் சந்தித்துள்ளது.

புகையிரத திணைக்களத்தின் தற்காலிக ஊழியர்களாக தொழிலில் இணையும் போது அவர்கள் வேறு தொழில் கிளிலில் ஈடுபட்டிருந்தவர்களாகும். அவர்களை ஓய்வூதியம் உள்ளிட்ட அனைத்து சலுகைகளையும் தருவதாக கூறியே தற்காலிக நியமனம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த தேர்தலில் தமது விருப்பு வாக்கை அதிகரித்துக் கொள்வதற்காக இந்த இளைஞர் யுவதிகளை ஏமாற்றிய அமைச்சர்கள், அதேபோன்று வெல்கமவின் மகனின் தேர்தல் நடவடிக்கைகளுக்கு தற்காலிக ஊழியர்களை பயன்படுத்த விருப்பதாகவும் இலங்கை புகையிரத ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் சுமதிபால மானவடு தெரிவித்தார்.

புகையிரத திணைக்களத்தின் ஆட்களை சேர்க்கும் வழிமுறைகளை சரிவரக் கையாள்ாது இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதினால் நிரந்தரமாக்குவதில் சிக்கல் ஏற்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். இது தொட்பாக நாம் தோழர் மானவடுவிடம் வினவிய போது திணைக்கள படிமுறைகளை மீறப்பட்டு மேற்கொள்ளப்பட்டிருக்குமானால் திருட்டு பொருட்களுக்கு அவை-களை மீறியோருக்கு எதிராகவே நீதியை நிலைநாட்டப்பட வேண்டுமெனத் தெரிவித்தார்.

## பிள்ளைகளுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு


**இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பிரதான செயலாளர் தோழர் மகிந்த ஜயசிங்க**



பாடசாலைகளுக்கு பிள்ளைகளை சேர்த்துக் கொள்வதில் ஏற்பட்ட சிக்கலின் காரணமாக அநீதி இழைக்கப்பட்ட பிள்ளைகளின் மனித உரிமைகள் மீறப்பட்டிருப்பதால் இலங்கை ஆசிரியர் சேவைகள் சங்கம் கடந்த 22ம் திகதி மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்தது. இலங்கை ஆசிரியர் சேவைகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் மகிந்த ஜயசிங்க, பொருளாலர் தோழர் பிரியந்த லியனகே உள்ளிட்ட பலர் இதில் கலந்துக் கொண்டனர்.

இதன்போது புலமைபரிசில் புள்ளியை தீர்மானிக்கும்போது அநீதி இழைக்கப்பட்டுள்ள பாடசாலைகளில் மீள புள்ளியை கணக்கிடவும் அவைகளை மறுசீரமைக்கவும், அதேபோன்று 6,7,8ம் வகுப்புகளிற்கு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படும்போது புலமைபரிசில் புள்ளியை கவனத்தில் எடுப்பது உள்ளிட்ட பல விடயங்கள் இதில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

## மக்கள் குரலை வெற்றி வாகை சூட்டுவதற்கு



ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதா அல்லது மாகாணசபைத் தேர்தலை நடத்துவதா எனறு தடுமாறிக் கொண்டிருந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் கடை-சியாக தென்மாகாண சபைத் தேர்தலையும் மேல் மாகாண சபைத் தேர்தலையும் நடத்துவதற்கு முடிவு செய்தது. இந்த தேர்தலை நடத்துவதற்கான காரணம் ஜனாதிபதித் தேர்தல் வரையில் செல்வதற்காக பரீட்சித்துப் பார்ப்பதற்காகும். அதனால் ராஜபக்ஷாக்களின் பிரதான நோக்கம் எப்படியாவது வாக்குகளை அதிகரித்துக் கொள்வதேயாகும். இவ்வாறான சூழலில் அரசாங்கம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் எவருக்கும் போட்டியிடுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது. அதனால் அரசியல் அறிவற்ற நடிகைகள், வியாபாரி கள், அமைச்சர்களின் பிள்ளைகள். உறவினர்கள் அனைவரும் தேர்தலில் வேட்பாளர்களாக நிறுத்துவதற்கு முற்பட்டுள்ளது.

இந்த நிலமைகளின் கீழ் மக்கள் விடுதலை முன்னணி கொள்கை ரீதியான அரசியலை முன்னெடுத்து வருகிறது. அதற்கான செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது. குறிப்பாக மக்கள் விடுதலை முன்னணியின் வேட்பாளர்கள் நடத்தும் கூட்டங்களில் பெரும்திரளான மக்கள் கலந்துக் கொள்வது காணக்கூடியதாயிருக்கிறது. கடந்த ஜனவரி 22ம் திகதி "மக்கள் குரலை வெற்றிபெறச் செய்வோம்" எனும் தலைப்பில் மொரட்டுவையில் நடைபெற்ற கூட்டத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் தோழர் ரில்வின் சில்வா குறிப்பிட்டார். நடிகை, நடிகர்களுக்கு தேர்தலில் கலந்துக் கொள்ளும் உரிமை இல்லையென்று நாம் ஒருபோதும் குறிப்பிட மாட்டோம். ஆனால் தற்போதைய அரசியல் கலாசாரத்தை மாற்றியமைத்து சிறப்பானதோர் சமூகத்தை உருவாக்குவதற்காக தேவைப்படுவது உடல் அழகு மட்டுமமிருக்கும் நடிகைகளோ அறிவில்லாத அரசியல்வாதிகளுக்குப் பதிலாக, தொழிற்சங்கத் தலைவர்கள், தொழில் வல்லுனர்கள், அரச ஊழியர்கள் போன்ற துறைகளைச் சார்ந்த அறிவுஜீவிகளாகும்.


## ஓய்வூதிய வயது எல்லையை நீடிப்பதற்கு எதிராக



ராஜபக்ஷ அரசாங்கத்தை போன்று விவசாயிகளை நசுக்கிய வேறு அரசாங்கத்தை இலங்கை வரலாற்றில் காண முடியாது. விவசாயத்திற்கான உட்கட்மைப்பு சலுகைகளை அதிகரிப்பதற்கு, அதேபோன்று விவசாயிகளின் ஓய்வூதியத்தை துண்டித்தும், அதேவேளை தருவதாக வாக்குறுதியளித்தும். ஏமாற்றி வந்துள்ளது. அதாவது விவசாயிகளுக்கான ஓய்வூதியம் வழங்குவதற்காக 100 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. அது விவசாயிகளின் போராட்டத்தின் காரணமாகவே நிகழந்துள்ளது. அதேவேளை விவசாயிகளுக்கான ஓய்வூதியம் வழங்கும் காலத்தை 60 லிருந்து 63 வயதாக அதிகரித்துள்ளது. மறுபுறத்தில் 2011 ஆம் ஆண்டிலிருந்து விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய ஓய்வூதிய நிலுவை தொடர்பாக அரசாங்கம் மௌனம் காத்து வருகிறது. ஓய்வூதியத்தை பெறுவதற்கான காலத்தை நீடித்தல், நிலுவைகளை செலுத்துவதற்கு நிதி ஒதுக்கப்படாமை, ஆகிய விடயங்களை முதன்மையாக கொண்டு அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனம் கடந்த ஜனவரி 03ம் திகதி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் மகஜர் ஒன்றை சமர்ப்பித்தது. அதன்போது சம்மேளனத்தின் தலைவர் தோழர் நாமல் கருணாரத்ன, சட்டத்தரணி சுனில் வட்டகல ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றத்தை கோருகின்ற நெருக்கடி



2008 செப்டம்பரில் ஐக்கிய அமெரிக்காவில் ஆரம்பமான பொருளாதார பின்னடைவானது இன்று ஐந்து வருடங்கள் கடந்திருந்த போதிலும் முடிவுகாணப்படவில்லை. அது குணப்படுத்த முடியாத மரணத்தைக் கொண்டுவரும் தொற்று நோயாக சிறுக சிறுக பரவிக்கொண்டிருக்கிறது. முதலாளித்துவத்தின் நெருக்கடிக்கு தீர்வு இல்லையென்றும், தற்போது மிஞ்சியிருப்பது, அதை அகற்றிவிட்டு புதிய சமூகத்திற்கு இடமளிப்பது மட்டுமே என நெருக்கடியின் வரலாறு நிரூபித்துள்ளது. பராக் ஒபாமா முதல் மகிந்த ராஜபக்ஷ வரையில் அதாவது உலகத்தில் பலம் பொருந்திய நாட்டுத் தலைவர்களிலிருந்து நலிவடைந்த நாட்டுத் தலைவர்கள் வரையில் அனைவரும் இந் நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான முயற்ச்சிகளை மேற்கொண்ட போதிலும் அது பொய்யான முயற்ச்சியென்றும், அதை செய்ய முடியாத ஒன்றென வரலாறு மீண்டும் மீண்டும் நிரூபிக்கிறது. முதலாளித்துவ முறையின் நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு முதலாளித்துவ வர்க்கம் மேற்கொள்ளும் முயற்ச்சியை பற்றி லெனின் இவ்வாறு குறிப்பிடுகிறார். "ஒருவர் தனது சப்பாத்து லேசில் இழுத்து தன்னையே தூக்கிக் கொள்கின்ற தோல்வியடைந்த முயற்சியாகும். என்று குறிப்பிடுகிறார்.

பிறப்பிலேயே தோன்றிய ஊனமுற்ற நிலையும் போஷாக்கின்மையும், கடனுக்கு சாப்பிடும், பிச்சையெடுத்தல் மற்றும் களவாடுதலை கொள்கையாக கொண்டுள்ள பொருளாதாரத்தையும் தற்போதைய உலக பொருளாதார பின்னடைவின் பாதகமான நிலமைகளால் இலங்கை பொருளாதாரம் கவலைக்கிடமான நிலையை அடைந்திருக்கிறது. இந்த கவலைக்கிடமான நிலையானது, பொருளாதாரத்தை கடந்து முழு சமூகத்தையும் பற்றிக் கொண்டிருப்பதை காண முடிகிறது. அண்மையில் இணையத் தளமொன்றில் வெளியான செய்தியில் கூறப்பட்டிருப்பதாவது, எம்பிலிபிட்டிய நிதிமன்ற வலயத்தில் மட்டும் 2013ம் ஆண்டு சிறுவயது பிள்ளைகள் 497 பேர் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகியுள்ளனர். அவர்களில் 29 பேர் தாய்மை அடைந்திருப்பதாகவும் தெரிவிக்கிறது. நாடு வீழ்ந்திருக்கும் பேரழிவினை காட்டுவதற்கு இதைவிட வேறு சான்றுகள் தேவையில்லை. இது ஒரு நீதிமன்ற வலயத்தில் மட்டும் வெளியான தகவல்களாகும். தெரியவராத செய்திகள் உள்ளிட்ட நாடு முழவதிலும் எவ்வாறு அமைந்திருக்கும்?

ராஜபக்ஷ ஆட்சியின் கீழ் இலங்கையானது பாரிய பொருளாதார, அரசியல், சமூக மற்றும் கலாசார ரீதியாக சீரழிந்துள்ளது. பொருளாதாரம் முழுமையாக வீழ்ச்சியடைந்துள்ளதுடன் நாட்டை கடன் பொறியில் சிக்கவைத்துள்ளது. கடனுக்கு சாப்பிடும், வரி அறவிடும், அபராதம் விதிக்கும், சூதாட்டம் போடும், களவாடும் வியாபார பொருளாதாரத்தினால், அதற்கு ஏற்றவாறு தோன்றிய காடைத்தன அரசியல் கலாசாரத்தினால், சமூகத்தின் முழு உடலையும் சிதைத்துள்ளது. அதன் பிரதிபலன்களையே இப்போது மக்கள் அனுபவிக்கின்றனர். மக்களின் வாக்குகளால் ஆட்சிபீடமேறிய போலி மக்கள் பிரதிநிதிகள் மக்கள் சேவையில் ஈடுபடுவது அபூர்வமானதாகும். அதிகாரத்தை கையில் வைத்துக் கொண்டு மக்களை கொல்லுகின்றனர். பெண்கள் மற்றும் சிறுவர்களை இம்சிக்கின்றனர். குடு (ஹெரோயின்) கொண்டு வந்து விற்கின்றனர். கள்ளச் சாராயத்தை வடிக்கின்றனர். அதற்காக எத்தனோல் இரசாயனத்தை கொண்டு வருகின்றனர். அரச ஊழியர்களை மரத்தில் கட்டுகின்றனர். ஆசிரியர்களை முட்டுக்காளில் வைக்கின்றனர். இலஞ்சம் பெறுகின்றனர். சகல சட்டவிரோத மற்றும் சமூக விரோத செயல்களில் ஈடுபடுகின்றனர். அதற்கு முதலாளித்துவ சட்டம் செவிடாகவும் குருடாவும் உள்ளது.

அரசியலை காடைத்தனத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளபோது சகல சமூக நிறுவனங்களும் அதற்கேற்றவாறு சிரழிவுக்குள்ளாவது தவிர்க்க முடியாது. கப்பம் வாங்கியதற்காக பிரதி பொலிஸ் மா அதிபரொருவர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பதும். போதைபொருள் வியாபாரத்தில் ஈடுபட்டதாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஒருவர் கைது செய்யப்படுவதும், சாதாரண பொலிஸ்காரர்கள் பலர் கப்பம் பெற்றதன் குற்றத்திற்காகவும், போதை பொருள் விற்றதன் குற்றத்திற்காகவும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பதும் இதன் அடிப்படையிலாகும். இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் தலைவருக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருக்கும் நாட்டில் வேறு கதைகள் தேவையா? சமூகம் இவ்வாறான நெருக்கடியில் அமிழ்ந்திருக்குபோது அதில் பாதிப்படைவது பொது மக்களாகும். நாட்டின் எதிர்காலமான பிள்ளைகளாகும். இந்த நிலமைகள் மாற்றத்திற்காக அனைவரையும் வலியுறுத்தி வருகிறது. அந்த மாற்றம் என்னவென்று புரிந்து கொள்வது இப்போதைய அத்தியாவசிய தேவையாகும்.

சமூகத்தின் முழு சரீரமும் நெருக்கடிக்குளள்ளாகி அதனுல் மக்கள் ஒடுக்குமுறைக்குள்ளாகி மாற்றத்தை தேடுபோது அது தாங்களது தனிப்பட்ட குறுகிய அரசியல் நோக்கத்திற்காக பயன்படுத்துவதற்காக முதலாளித்துவ வர்க்கமும் சந்தர்ப்பவாதிகளும் முயற்சிக்கின்றனர். அதன் காரணமாகவே நடைபெற வேண்டிய மாற்றத்தை சரிவர புரிந்து கொள்ள வேண்டும். தற்போதய நிலைமைகளை தமக்கு சாதகமாக பயன்படுத்துவதற்கு எத்தனிக்கின்ற ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிகமசிங்க கூறுவதாவது, இப்போது ராஜபக்ஷ ரெஜிமென்டை தோற்கடிக்க மக்கள் முன்வர வேண்டும். ஆனால் இந்நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்து 66 வருடங்களாக செய்ததுபோல் 'ராஜபக்ஷ ரெஜிமென்டுக்குப்' பதிலாக 'விக்கிரமசிங்க ரெஜிமென்டை' கொண்டு வருவதில் பயனேதும் கிடையாது. தற்போதைய நெருக்கடி கேட்பதோ ஆட்சியின் எளிமையான மாற்றமல்ல. சமூக முறைமையில் மாற்றமாகும். முதலாளித்துவத்தை முன்னெடுத்துக் கொண்டு அதனுல் நீதியை நியாயத்தை மற்றும் நல்லாட்சியை கட்டியெழுப்புவதற்கு அழைப்போர்கள் அரசியல் காவாலிகளாகும். அல்லது அரசியலில் முதிர்ச்சியடையாத அரசியல் குழந்தைகளாகும். குழியில் விழுவது மூளைக்கு லாபம் என்று ஒருமுறை மாவோ சேதுங் கூறியுள்ளார். ஆனால் நமது நாட்டு மக்கள் இன்னும் அந்த லாபத்தை அடையவில்லை. அவர்கள் இரவு விழுந்த குழியில் பகலிலும் விழுகின்றனர். ஆட்சியை மாற்றுவதற்கு முன்னர் மக்கள் மாற்றமடைய வேண்டும்.

இலங்கை எதிர்நோக்கியிருக்கும் இந்த ஒட்டு மொத்த நெருக்கடியின் ஊற்று அடங்கியிருப்பது பொருளாதார நெருக்கடியிலாகும். இலங்கையில் உற்பத்தி பொருளாதாரம் இல்லை. அரசாங்கத்தின் வருமான மார்க்கமாக கடனை, வரியை, அபராதத்தையே நம்பியிருக்கிறது. இப்போதும் கூட அரசாங்கம் முயற்சித்து வருவது உற்பத்தி பொருளாதாரத்திற்கு முன்னுரிமை அளிப்பதற்கல்ல, சூதாட்டம், களியாட்டம், மது, மாது போன்வற்றை முன்னெடுக்கும் சுற்றுலாத்துறைக்கே முன்னுரிமையளித்து வருகிறது. அது சீரழிவுமிக்க பொருளாதாரமாகும். அதில் இலங்கைக்கு கிடைக்கின்ற நன்மைகள் எதுவும் கிடையாது. அதற்குப் பதிலாக இலங்கையை விபச்சார விடுதியாகவும் சூதாட்டக் களமாகவுமே மாற்ற முடியும். இன்று இலங்கையில் தனியாள் ஒருவரை 3,21,000 ரூபாய் கடனாளியாக்கி 6,49,000 கோடி ரூபாய் திருப்பி செலுத்தப்படாத கடனாக குவிந்துள்ளது. அதன் காரணமாக ஒவ்வொரு வருடமும் 1000 கோடி ரூபாய் கடனுக்கான வட்டியும் தவணை பணமும் செலுத்த வேண்டியிருக்கிறது. அதனால் இப்போது கடன் பெறுவது வட்டியும், தவணையும் செலுத்துவதற்காகும். இப்போது உலக நாடுகள் இலங்கை அரசாங்கத்திற்கு கடன் வழங்குவதை குறைத்துள்ளது. அதனால் இலங்கை வங்கிகளின் சொத்துக்களை அடகு வைத்து அரசாங்கம் கடன் வாங்குகிறது. ஆனால் கடன் பெறும் அளவுக்கு வங்களின் சொத்துக்கள் போதுமானதாக இல்லை. அதனால் அரசாங்கம் வங்கிகள் அனைத்தினதும் சொத்துக்களை ஒன்றுதிரட்டுவதற்கான முயற்ச்சியில் இறங்கியுள்ளது. அதேபோன்று அரச நிறுவனங்கள் நட்டமடைவதாலும் பொருளாதாரத்திற்கு பாரிய தாக்கதை ஏற்படுத்தியுள்ளது. தற்போது மின் உற்பத்தி நிலையங்கள் செயலிழந்து போயிருப்பதினால் மின்சார சபைக்கு ஒரு நாளைக்கான நட்டம் 16 கோடி ரூபாயென தெரியவருகிறது.

இந்த நெருக்கடிகளின் சுமைகளை மக்கள் மீது ஏற்றுவதைத் தவிர வேறுமார்க்கம் ராஜபக்ஷ அரசாங்கத்தின் வசமிருக்கிறதா? இல்லை. இந்த நெருக்கடிக்கு முகம் கொடுப்பதற்காக அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கையானது, மக்கள் மீது மென்மேலும் சுமைகளை ஏற்றுவதேயாகும். அதற்காக மக்களின் நிவாரணங்கள் அனைத்தையும் அறுத்தெரிந்து வருகிறது. இலவச கல்வி மற்றும் இலவச சுகாதார துறையை ஒழிப்பதில் துரித நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும் அரச ஊழியர்களின் தொழில் குறைப்பு மற்றும் வரி சுமைகளை அதிகரித்தல் போன்ற நடவடிக்கைகளையே

(தொடர்ச்சி 11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த கட்சியே எமது உயி

**தவிசாளர் குழுவின் அங்கத்துவ தோழர்களே, செயலாளர் குழுவின் அங்கத்தவ தோழர்களே, 7வது தேசிய மாநாட்டில் தெரிவு செய்யப்பட்ட மத்திய செயற்குழு தோழர்களே, தோழியே, மாநாட்டில் கலந்துக் கொண்டிருக்கும் அனைத்து அங்கத்துவ சகோதர, சகோதரிகளே.**


நமது நாடு இன்று பாரிய ஆபத்தையும், அனர்த்தத்தையும் எதிர்கொண்டிருக்கும் வேளையிலேயே நாம் 07வது தேசிய மாநாட்டை நடத்துகின்றோம். ஒருபுறத்தில் பொருளாதாரம் பாரிய நெருக்கடியில் அமிழ்ந்து மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர். மறுபுறத்தில் நீதிமன்றம், பாராளுமன்றம் போன்ற நிறுவனங்கள் ஒரு குடும்பத்தின் பிடிக்குள் சிக்கியுள்ளது. சட்டத்தின் ஆதிக்கம் முற்றாக செயலிழந்துள்ளது. அதேபோன்று ஏகாதிபத்தியத்தின் முன்னால் நமது நாட்டை அடிபணியச் செய்துள்ளனர். அதேபோன்று 'குடு' (ஹெரோயின்) கெசினோ, எத்தனோல்களால் நிறைந்துள்ளது. கல்வியில், சுகாதாரத்தில் அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டு மக்கள் ஒடுக்கப்பட்டு வருகின்றனர்.

தற்போது தோன்றியுள்ள சவாலுக்கு முகம் கொடுக்க கூடிய பலம்வாய்ந்த மக்கள் போராட்ட மத்திய நிலைய்மென்றை கட்டியெழுப்ப வேண்டுமென்ற தீர்மானத்தை நாம் நிறைவேற்றியுள்ளோம். அதற்காக மக்களுக்கு வழிகாட்டக் கூடிய மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையில் விரிவான தேர்தல் முன்னணியை கட்டியெழுப்ப வேண்டுமென்ற தீர்மானத்தையும் நாம் நிறைவேற்றியுள்ளோம். காடைத்தனத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ள பொருளாதார கொள்கைக்குப் பதிலாக நாட்டு மக்களை அழுத்தங்களுக்கு இறையாக்கி சொற்ப வசதிபடைத்த வர்க்கத்தினரால் பொருளாதாரத்தின் மொத்த சாரத்தையும் கைப்பற்றியுள்ள இந்த துஷ்டத்தனமான முறைக்கு எதிராக புதிய சோஷலிச சமூக முறைக்கான பல தீர்மானங்களை நிறைவேற்றிக் கொண்டுள்ளளோம். அதேபோன்று கட்சிக்குத் தலைமை தாங்குவதற்காக நமது கட்சியின் அதியுயர் நிறுவனமான மத்திய செயற்குழுவை தெரிவு செய்துள்ளோம். அதேபோன்று 07வது தேசிய மாநாடு என்னிடம் விஷேட பொறுப்பொன்றை ஒப்படைத்துள்ளது. இந்த கட்சி என்ன? இந்த கட்சி எதற்காக? என்பதை நாம் நன்றாக புரிந்து வைத்திருக்கிறோம்.

1965ல் இந்த கட்சியை உருவாக்குவதற்கான காரணம் இப்போதிருக்கும் நலிவடைந்த, பலவீனமான, பின்தங்கிய முதலாளித்துவ முறைக்கு நமது நாட்டை ஒரு அங்குலத்திலேனும் முன்னெடுத்துச் செல்ல முடியாதென்பதை புரிந்துக் கொண்டதினாலாகும். அதற்குப் பதிலாக நமது நாட்டில் தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்புவதற்கு, தேசிய சுதந்திரத்தை வென்றெடுப்பதற்கு, சமத்துவம் மற்றும் சமூக நீதியை நிலைநாட்டுவதற்கு, சோஷலிச சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு போன்ற உன்னதமான நோக்கங்களுக்காக கட்டியெழுப்பபட்ட இயக்கமே இது. தோழர் ரோகண விஜேவீராவால் கட்டியெழுப்பட்ட இந்த இயக்கம் இரண்டு ஆயுத போராட்டங்களை சந்தித்துள்ளது. 1971ல் 20.000 திற்கும் அதிகமான தோழர், தோழிகளை அன்றைய முதலாளித்துவ ஆட்சி காவுகொண்டது. 1988-89 காலப்பகுதியில் தோழர் ரோகண விஜேவீர, தோழர் உபதிஸ்ஸ கமநாயக்கா, தோழர் சமன் பியசிரி பிராண்ந்து உள்ளடங்களாக பல தலைவர்கள் கொல்லப்பட்டனர். மரணத்தின் முன்னிலையிலும் கூட கட்சியின் கொள்கைகளை காட்டிக் கொடுக்காத அங்கத்தவர்களை கொண்ட திடமான கட்சிதான் மக்கள் விடுதலை முன்னணி.

நாட்டிற்கு உயர்வான சுதந்திரத்திற்காக தேசிய ஒற்றுமைக்காக, சமத்துவத்திற்காக, நீதி, நியாயத்திற்காக

**தோழர் அனுர திசாநயக்க அவர்கள்**
**மக்கள் விடுதலை முன்னணியின் தலைவராக தெரிவான பின்னர்**
**07வது தேசிய மாநாட்டு அங்கத்தவர்களுக்கு ஆற்றிய உரை**



தன்னுயிரை அர்ப்பணிக்க கூடிய மனிதர்களை உருவாக்கிய கட்சி, இன்றும் இந்தக் கட்சிக்கு தலைமைத் தாங்கும் தலைமைத்துவக் குழு யார்? தோழர் சோமவன்ச அமரசிங்க 1971ல் கைது செய்யப்பட்டு 5 வருடங்களுக்கு அதிகமாக பலவேறு துன்பங்களையும் சித்திரவதைகளையும் சந்தித்துள்ளார். ஆனால் சோஷலிசத்தைப் பற்றி, கட்சியின் வெற்றியை பற்றிய நம்பிக்கையை இழக்கவில்லை. தோழர் ரில்வின் சில்வா 1987ல் கைது செய்யப்பட்டு சுமார் 7 வருடங்களுக்கு மேலாக வதைமுகாம்களில், சிறைச்சாலைகளில், வேதனைகளையும் துன்பங்களையும் அனுபவித்தபோதிலும், கட்சியின் செங்கொடியை கீழே விழ விடாது தோளில் தாங்கி வந்துள்ளார். தோழர் விஜித ஹேரத் 3 வருடங்களுக்கு மேலாக வதை முகாம்களில் துன்பங்களை அனுபவித்த போதிலும் இந்த இயக்கத்துடன் முன்நோக்கிச் செல்வதை எதிரிகளால் தடுத்து நிறுத்த முடியாது போயுள்ளது. தோழர் லால்காந்த 3 வருடங்களுக்கு மேலாக வதைமுகாம்களில் கட்சிக்காக, மக்களுக்காக, நாட்டின் தேசிய விடுதலைக்காக பாரிய துன்பங்களை அனுபவித்துள்ளார். இங்கு இருக்கின்ற பலர் மயிரிழையில் உயிர் தப்பியவர்களாகும். பலர் வதைமுகாம்களில் துன்பங்களை அனுபவித்தவர்களாகும். **இந்த கட்சியில் நாம் இணைந்தது சோஷலிசத்திற்காக, செயற்படுவதும் சோஷலிசத்திற்காக, நாம் சாவதும் சோஷலிசத்திற்காக.**

இந்த கட்சி கீழ் மட்டத்திலிருந்த மனிதர்களை ஆளுமையுள்ள மனிதர்களாக உருவாக்கியுள்ளது. நம்மில் பலர் பெரிய குடும்பங்களில் பிறந்தவர்கள் அல்ல. நாம் பணக்கார வர்க்க குடும்பங்களிலிருந்து வந்தவர்கள் அல்ல. நாம் மிகவும் கீழ்மட்டத்திலிருந்து வாழ்க்கையை ஆரம்பித்தவர்களாகும். எனது தந்தை நில அலவை தொழிலாளி. எனது அம்மாவுக்கு எழுத வாசிக்கத் தெரியாது. அவ்வாறான மனிதர்களை இந்நாட்டில் தேசிய தலைவராக ஆக்கியிருப்பது யார்?

பெரும் ஆளுமையுள்ள மனிதர்களாக ஆக்கியிருப்பது யார்? **எமது வாழ்க்கையும் கட்சி, எமது குடும்பமும் கட்சி, எமது அயல்வர்களும் கட்சி, எமது பாடசாலையும், பல்கலைக்கழகமும், கல்வியும் கட்சியாகும். எமது உல்லாசமும் கட்சி எமது இன்பமும் கட்சி, நாம் நமது கட்சி.** இந்த கட்சி இந்த இலங்கை மண்ணிலிருந்து அழித்தொழிக்க முடியாது, எல்லா இடங்களிலும் வேர்விட்டிருக்கும் கட்சியாகும். மகா புருஷர்களின் உயிர் தியாகம் செய்து பல்வேறு துன்பங்களை அனுபவித்து பாரிய அர்ப்பணிப்பு, தியாகங்களின் வேர்களே சகல இடங்களிலும் படர்ந்திருக்கிறது. கட்சியில் வேர் ஓடாத நிறுவனங்கள், இடங்களை இனங்காண முடியாது. சகல இடங்களிலும் அதன் வேர் ஒடுகிறது. இந்த இயக்கத்தை கட்டியெழுப்புவதற்கு சாதாரண மனிதர்களால் செய்ய முடியுமென்று நம்பமுடியாத செயல்களை புரிந்த கட்சியாகும். சாதாரண மனிதர்களுக்கு வாழ்நாள் முழவதிலும் எவ்வளவு திறைமையானவர்கள் என்றாலும் செய்ய முடியாதவைகளை ஒரு நிமிடத்தில், ஒரு மணி நேரத்தில் செய்யக் கூடிய பலம் பொருந்திய கட்சி இதுவாகும். இந்த இயக்கமே முதலாளித்துவ வர்க்கத்தின் எதிரியாகும். அதுதான் சரியான முடிவாகும். தேர்தலின் பின்னர் பின்னடைவு ஏற்பட்டுவிட்டது. ஜே.வி.பி. இறுதி பயணம் போகிறதென்று கூறுகின்றனர். ஆனால் தேர்தல் முடிந்து ஒருமாதம் சென்றதன் பின்னர். முதலாளித்துவ வர்க்கம் இந்த கட்சிக்கு எதிராக செயற்படுகின்றனர். இது அர்ப்பணிப்பு, தியாகம், துணிவுமிக்க மனிதர்களால் உருவாக்கப்பட்ட கட்சியாகும். இந்த இயக்கம் முகம் கொடுத்த கடினமான சவால்களை நன்கு பரீட்சித்துப் பார்த்திருக்கிறது. 1971ல் பத்தாயிரத்திற்கும் அதிகமானவர்களை கொன்று தோழர் விஜேவீர உள்ளிட்ட தலைவர்களை கைதுசெய்து கட்சியை பூண்டோடு அழிப்பதற்கு முயற்சித்தனர். ஆனால் அது முடியுமானதாக இருக்கவில்லை. 88-89களில் அரச யல் குழுவில் தோழர் சோமவன்ச அரமரசிங்கவைத் தவிர மத்திய செயற்குழுவைச் சோந்த அனைவரும் அதேபோன்று எமது ஆதரவாளர்கள் பெருந்தொகையினர் படுகொலை செய்யப்பட்டு இந்த கட்யின் வேர்களை அறுத்துவிட எத்தனித்தனர். ஆனால் அரசியல் குழுவில் அபரிமிதமான சக்திபடைத்த மனிதர் ஒருவர் எஞ்சியிருந்தார். அவர் கட்சியை மீள கட்டியமைத்தார். சிறைக்கூடங்களில் இந்த இயக்கத்தை மீள கட்டியெழுப்பும் மனிதர்களில் நிரம்ப தொடங்கியது. காடுகளில் மறைந்திருந்தோர் மீண்டும் இந்தக் கட்சியை கட்டியெழுப்பத் தொடங்கினர். கல்வி நிறுவனங்களில் இந்த கட்சியை மீள வெற்றியை நோக்கி கொண்டுச் செல்வது எவ்வாறு என்ற கருத்தாடல் ஆரம்பமானது.

எமது நாட்டு அரசியலில் தீர்மானகரமான திருப்புமுனை 1994ல் ஏற்பட்டது. 94ல் இலங்கையில் அரசியலில் இரண்டு முகாம்களாக பிரிந்திருந்தன. ஒன்று ஐக்கிய தேசிய கட்சி, மற்றையது சந்திரிகாவின் தலைமையிலான மனிதாபிமான முகம், சகல மக்களும் இரண்டு முகாம்களை நோக்கி பிரிந்திருந்தபோது எளிமையான அரசியலை புரிந்துக் கொண்டவர்கள் சந்திரிகாவின் மீள்வருகையைப் பற்றி அழகான வாக்கியங்களை எழுதும்போது, அவ்வேளையில் நமக்கு நமது அரசியல் வகிபாகத்தை கைபற்றிக் கொள்ள வேண்டியிருந்தது. அதற்கமையவே 94 தேர்தலில் போட்டியிடுவதற்கு தீர்மானிக்கப்படுகிறது. அந்த தீர்மானம் வெறுமனே எடுத்த ஒன்றல்ல. பெரிய கலந்துரைடல் ஒன்று இலங்கையில் இருந்தது. அப்போது தோழர் சோமவன்ச கூறினார் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஆட்கள் இல்லையென்றால் தேங்காய் மட்டைகளையாவது போடுங்கள். ஏனென்றால் 94 தேர்தல் நமக்கு அவ்வளவு முக்கியத்துவம் நிறைந்தது. அதன்படி தான் ஒன்றுகூடியவர்கள் ஒருவரையொருவர் அறிமுகமில்லாத போதி மரத்தடியிலும், பஸ் தரிப்பிடங்களில் கூடி ஒருவரை ஒருவர் அறிமுகமாகி கட்சி வலையமைப்பு தோழர் சோமவன்ச தலைமையில் ஆரம்பமாகிறது. 94ன் பின்னர் நமக்கு விஷேட கடமைபொறுப்பு ஒப்படைக்கப் படுகிறது. அப்போது நாங்கள் பல்வேறு பொறுப்புகளுக்கு வருகின்றோம். நம்மில் யாருக்கும் பொறுப்புகள் பற்றிய தெளிவு இருக்கவில்லை. எமக்கு உடையை அணிவதெப்படி, ஒரு இடத்திற்கு சென்று சாப்பிடுவது எப்படி, மற்றைய அரசியல் தலைவர்களுடன் பழகுவது பற்றி இவை அனைத்தையும் எமக்கு கற்றுக் கொடுத்தவர் அப்போது வெளிநாட்டிலிருந்த தோழர் சோமவன்ச அமரசிங்காவாகும். பேனாவை பிடித்து எழுதும்போது விரல்கள் தேயுமானால் தோழர் சோமவன்சாவின் விரல்கள் தேய்ந்திருக்க வேண்டும். இப்போதும் பத்து அடி அறையில் அரைவாசி பெக்ஸ செய்திகளால் நிரம்பியிருந்தது. அரசியலில் அனைத்து திருப்பு முனைகளையும் முடிவெடுப்பதற்கு கட்சியை வழிநடத்தினார். 94ல் எதிரிகள் இந்த கட்சியை கொள்ளையடிக்க முயற்சித்தனர். வெளிநாட்டில் இருந்துக் கொண்டு கட்சியின் உரிமையை பாதுகாப்பதற்காக தேர்தல் ஆணையாளருக்கு அடிக்கடி கடிதங்களை அனுப்பியதோடு சில நேரங்களில் கடும் தொனியில் எழுதி கட்சியின் உரிமையை மீண்டும் வர்க்கத்திற்கு உறுதிப்படுத்துவதற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர். சாவதும் இந்தக் கட்சிக்காவே

நாங்கள் யாரும் எதிர்பார்த்திராத வேளையில் செயற்பட்டவர் தோழர் சோமவன்ச அமரசிங்காவாகும். இந்த ஒவ்வொரு கஷ்டமான சந்தர்ப்பத்திலும் தவிர்க்க முடியாதவாறு தனித் தனி நபர்களுக்கு பொறுப்பு வருகிறது. மிக வேகமாக அதை அமைப்புரீதியான கட்சியாக மாற்ற வேண்டும். அதற்காக அரசியல் குழுவும், மத்திய செயற்குழு ஊடாக தீர்மானங்கள முடிவுகளை எடுப்பதற்கு இந்த கட்சியை யாப்புரீதியாக ஸ்தாபிக்கப்பட வேண்டியிருந்தது. இப்போது நமக்கு அவ்வாறு கட்டியெழுப்பப்பட்ட கட்சியை வெற்றியை நோக்கி கொண்டுச் செல்வதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. நாம் எவரும் பொறுப்புகளை கேட்டுக்கொண்டு கட்சிக்கு வந்தவர்கள் அல்ல. இந்த கட்சியின் ஒவ்வொருவரினதும் முதல் பணி சுவரொட்டி ஒட்டுவதேயாகும். நாம் எல்லோரும் இந்த கட்சியினால் வழங்கப்படும் எந்தவொரு பொறுப்பினையும் நிறைவேற்றுவதற்கு கட்டுபட்டிருக்கிறோம். அதேபோன்று முடிவுகளும் கூட்டு தீர்மானங்களாகும். எல்லாச் செயற்பாடுகளும் கூட்டாக நடைமுறைப்படுத்துகின்ற செயற்பாடுகளாகும். அந்த கூட்டுறவு தான் நமது கட்சியின் பலமான ஆயுதமாகும், எனவே எனக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கும் பொறுப்பினை கூட்டாகவும் பொறுப்புணர்வுடனும் கட்சி உருவாக்கியுள்ள சிறந்த பண்புகளை, கட்டியெழுப்பியுள்ள புனிதத்தை சிறதளவேனும் பழுதுபடுத்தாது செயற்படுவேன் என்று இந்த 07வது தேசிய மாநாட்டிற்கு அறிவிக்கிறேன்.

நாட்டின் சட்டம் ராஜபக்ஷவின் விருப்பமாக மாறியிருக்கிறது. ராஜபக்ஷ விரும்பினால் ஒருவர் சிறையில் அல்லது வெளியில். ராஜபக்ஷ விரும்பினால் பிரதம நீதியரசர் கதிரையில் விரும்பாவிட்டால் அவர் வெளியே. இப்படியான நிலைக்கே இப்போது நாட்டை கொண்டு வந்துள்ளனர். அதனால் இதயமுள்ள மனிதர்களாக சமூக மாற்றத்தை எதிர்பார்க்கின்ற மனிதர்களாக நாட்டை இனியும் இவ்வாறு செல்ல இடமளிக்க வேண்டாம். இதை மாற்றியாக வேண்டும். அதற்கான தீர்மானங்களை நாம் நிறைவேற்றியுள்ளோம். இன்று மக்கள் மத்தியில் நம்மைப் பற்றிய நம்பிக்கை வளர்ந்துள்ளது. எல்லா இடங்களிலும் இதைத்தான் கதைக்கிறார்கள்! நாட்டிற்காக எதையாவது செய்வது நீங்கள் மட்டுமே. போராடுவதும் நீங்களே என்று இப்போது மக்கள் எல்லா இடங்களிலும் பேச ஆரம்பித்துள்ளனர். அவர்களை நாம் எப்படி உள்வாங்கிக் கொள்வது? எப்போதும் நமக்கு வெற்றிகளைத் தந்த எப்போதும் எம்மை மேலே உயர்த்திய பலம் வாய்ந்த மக்கள் போராட்ட முன்னணியை கட்டியெழுப்ப வேண்டும். பலம் வாய்ந்த தேர்தல் முன்னணியை உருவாக்க வேண்டும். நாம் மாநாட்டிலிருந்து வெளியேறுவது பலம்பொருந்திய தீர்மானங்களுடனாகும். அது மட்டுமல்ல இந்த நாட்டைக் கட்டியெழுப்பும் நமது நோக்கு, நமது வேலைத்திட்டத்தை நாம் முன்வைத்துள்ளோம். **அந்த வேலைத்திட்டம் முழுமையாக உள்ளடங்கியிருப்பது நவீன சோஷலிச சமூகத்தின் அடிப்படையிலான வேலைத்திட்டத்திலாகும்.** அதன் எதிர்பார்ப்பு மக்கள் நேயமுள்ள ஆட்சியாகும்.

என்றுமே இந்நாட்டு ஆட்சியாளர்கள் மக்கள் நேயமுள்ள ஆட்சியாளர்களாக இருக்கவில்லை. ஒன்று நண்பர்களுடனான ஆட்சியாக இருந்தது. அல்லது சகோதர ஆட்சியாக இருந்தது. அப்படியில்லாவிட்டால் குடும்ப ஆட்சியாக இருந்தது. ஆனால் மக்கள் விடுதலை முன்னணி இந்நாட்டில் கட்டியெழுப்பப் போவது மக்கள் நேயமுள்ள ஆட்சியாகும். பெரும்பான்மையின் விருப்பத்திற்கு அமைவான ஆட்சியாகும். அதற்காக அரசியலமைப்பில் முக்கியமான திருத்தங்களை மேற்கொள்ளப்படல் வேண்டும். அடிப்படைச் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டும். இந்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியானது சர்வாதிகார போக்குடைய பதவியாகும். அதை மாற்றியாக வேண்டும். ஜே.ஆர் கூறினார் ஆணை பெண்ணாக மாற்றுவதற்கு மட்டுமே நிறைவேற்று ஜனாதிபதி முறைக்கு முடியாது என்று. ஆனால் தற்போதைய ஆட்சி அதையும் செய்திருக்கிறது. இவ்வாறான சர்வாதிகார அரசியலமைப்பு நாட்டிற்கு வேண்டுமா? பெரும்பான்மையின் விருப்பம், பெரும்பான்மையின் தேவைகளுக்காக வழிநடத்தப்படும் ஆட்சியே எமக்கு வேண்டும். அது இன்றைய பாட்டாளி வர்க்கத்தினது தேவை மட்டுமல்ல. மத்திய வர்க்கத்தின் தேவை அதுவாகும். வியாபாரிகளின் தேவை அதுவாகும். அவர்கள் இன்று இந்த ஆட்சியாளருடன் பொருளாதாரத்தில், நீதி நியாயத்தில் தேசிய ஒற்றுமைக்கு, மக்களின் உரிமைக்கு முன்னோக்கி செல்ல முடியாதென்று கூறுகின்றனர். எனவே போராட்டமாக மாறியிருப்பது இந்த ஆட்சியை தோற்கடித்துவிட்டு மக்கள் நேயமுள்ள ஆட்சியை கட்டியெழுப்புவதாகும். அதற்கான அடிப்படை வேலைத் திட்டத்தை நாம் முன்வைத்துள்ளோம்.

நமது நாட்டின் சுற்றளவு அறுபத்தைந்தாயிரத்து அறுநூறு சதுர கிலோ மீட்டரை கொண்டது, காடுகளையும் நீர் குலங்கையும் கைவிட்டுப் பார்த்தால் எஞ்சுவது ஒரு சிறிய நிலப்பரப்பாகும். அதனால் நமது நாட்டில் பாரிய பண்ணைகள் ஊடாக அபிவிருத்திச் செய்ய முடியாது. நமது நாட்டில் விவசாயத் துறையை தொழில்மயமாக்குவதன் மூலமாக கொண்டுச் செல்ல வேண்டும். மாணிக்க கற்கள், போன்றவை நமது பொருளாதாரத்திற்கு இடைநிலையாகவே உதவ முடியும். அப்படியானால் பிரதானமான ஆயுதம் என்ன? அவுஸ்திரேலியாவில் மக்கள் அடர்த்தி சதுர கி.மீ 4பேர், அமெரிக்காவில் 32பேர், இத்தாலியில் 197பேர், சீனாவில் 144 பேர் இலங்கையில் 323பேர். நாம் பெரும் மக்கள் அடர்த்தியை கொண்ட நாடாகும். நமது நாட்டின் உயர்ந்த வளம் என்ன? அது மனித வளமாகும். நமது நாட்டை கட்டியெழுப்ப முடிவது உயரிய மனித வளத்தினாலாகும். அதற்காக எமது ஆட்சியில் கூடுதலாக நிதி ஒதுக்கப்படுவது கல்வி மற்றும் சுகாதாரத்திற்காகும்.

மகிந்த நினைக்கிறார் இந்த நாட்டை உல்லாசப் பயணத் துறையின் மூலமாகவே முன்னேற்ற முடியுமென்று அதனால் கூ:தலான பணத்தை செலவழிப்பது வீதிகளை, ஹோட்டல்களை அமைப்பதற்காகும். ஏன் எதற்காக? வெள்ளையர்களுக்கு தேவை ஹோட்டல், ஆடாது அசையாது போவதற்கு வீதிகள், கடந்த காலத்தில் 80 சதவீதமான உல்லாச பயணிகள் இங்கு வந்திருப்பது பொழுது போக்கிற்காகும். அது விபச்சாரம், போதை, சூதாட்டம் போன்றவற்றிலேயே தங்கியிருக்கிறது. ராஜபக்ஷாக்களுக்கு தேவை விபச்சாரிகள் இருக்கும் நாடாகமாற்றுவதேயாகும், கெசினோ விடுதியென்பது இவை அனைத்தும் உள்ள இடமாகும், போதைப்பொருள் தேவையான அளவு நாட்டில் பிரதமரும் கொண்டு வருகிறார். சூதாட்டம், விபச்சாரத் தொழிலும் நடத்த வேண்டும் விபசாரத்தில் ஈடுபடப்போவது யார், லக்ஷமன் யாப்பாவின் பிள்ளைகளா?, எஸ.பி திசாநாயக்காவின் பிள்ளைகளா? அந்த தொழிலுக்கு நமது தாய்மார்களே தாங்களது பிள்ளைகளை கொடுத்தாக வேண்டும். மகிந்த ராஜபக்ஷவின் பொருளாதார திட்டம் அவ்விடத்தை நோக்கியே வந்துக்கொண்டிருக்கிறது. அதனால் கல்விக்கான செலவு குறைக்கப்படுகிறது.

ஆனால் மக்கள் விடுதலை முன்னணி உயர்வான மனித வளத்தையே கட்டியெழுப்புகிறது. நாம் கல்வியை அரசின் பொறுப்பாக ஏற்றுக் கொள்கிறோம். அரசியலமைப்பில் அடிப்படை சட்டமாக மாற்றுவோம். சகல பிள்ளைகளுக்கும் பாடசாலைகளை பெற்றுக் கொடுப்பது அரசாங்கத்தின் கடமையாகும். ஆசிரியர்களை வழங்குவது, பாடசாலைக்கு வசதிகளை செய்து கொடுப்பது

(தொடர்ச்சி 11)

**மக்கள் விடுதலை முன்னணியின் புதிய அரசியற்குழு அங்கத்தவர்கள்.**

1. தோழர் அநுர திசாநாயக்க
2. தோழர் சோமவன்ச அமரசிங்க
3. தோழர் ரில்வின் சில்வா
4. தோழர் விஜித ஹேரத்
5. தோழர் லால் காந்த்த
6. தோழர் பிமல் ரத்னாயக்க
7. தோழர் சுனில் ஹந்துன் நெத்தி

**மக்கள் விடுதலை முன்னணியின் புதிதாக பதவியேற்றோர்.**

| | | |
|---|---|---|
| 1. | தோழர் அநுர திசானாக்க | - தலைவர் |
| 2. | தோழர் ரில்வின் சில்வா | - பிரதான செயலாளரும், கல்விச் செயலாளரும் |
| 3. | தோழர் சோமவன்ச அமரசிங்க | - சர்வதேச அலுவல்கள் செயலாளர் |
| 4. | தோழர் பிமல் ரத்னாயக்க | - தேசிய அமைப்பாளர் |
| 5. | தோழர் லால் காந்த்த | - செயற்பாட்டுச் செயலாளர் |
| 6. | சுனில் ஹந்துன் நெத்தி | - நிதிச் செயலாளர் |

**மக்கள் விடுதலை முன்னணியின் புதிய மத்திய குழு உறுப்பினர்.**

1. தோழர் அநுர திசானாயக்க
2. தோழர் சோமவன்ச அமரசிங்க
3. தோழர் ரில்வின் சில்வா
4. தோழர் விஜித ஹேரத்
5. தோழர் லால் காந்த்த
6. தோழர் பிமல் ரத்னாக்க
7. தோழர் சுனில் ஹந்துன் நெத்தி
8. தோழர் ஜினதாச கித்துலேகொட
9. தோழர் இராமலிங்கம் சந்திரசேகர்
10. தோழர் லக்ஷ்மண் நிபுணாராச்சி
11. தோழர் நிஹால் கலப்பத்தி
12. தோழர் சமந்த வித்தியாரத்ன
13. தோழர் மஹிந்த ஜயசிங்க
14. தோழர் வைத்தியர் நலிந்த ஜயதிஸ்ச
15. தோழர் காமினி ரத்னாக்க
16. தோழர் வசந்த பியதிஸ்ச
17. தோழர் சட்டத்தரணி சுனில் வட்டகல
18. தோழர் சமன்மலி குணசிங்க
19. தோழர் வைத்தியர் எச். பி. தம்மிக
20. தோழர் சந்திக்க அதிகாரி
21. தோழர் வசந்த சமரசிங்க
22. தோழர் சமந்த கோரலேஆராச்சி
23. தோழர் சுமதிபால மானவடு
24. தோழர் எம். டி. விஜேரத்தின
25. தோழர் சிசிர குமார வாஹலதன்திரி
26. தோழர் நாமல் கருணாரத்ன
27. தோழர் நலின் ஹேவகே
28. தோழர் டி. பி. சரத்
29. தோழர் சுதத் பலகல்ல
30. தோழர் சட்டத்தரணி ஜானக அதிகாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மக்கள் விடுதலை முன்னணியின் 7வது தேசிய மாநாட்டில் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்

01. .இலங்கையின் வங்குரோத்தடைந்த முதலாளித்துவ முறையானது, நவ லிபரல்வாத பொருளாதாரக் கொள்கையினை தொடந்தும் முன்னெடுத்துச் செல்கின்ற தற்போதைய ராஜபக்ஷ ஆட்சியானது இலங்கையை பாரிய சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கலாசார நெருக்கடியில் அமிழ்த்தியுள்ளது. இந்த நெருக்கடிக்கு இருக்கின்ற ஒரே தீர்வு நவீன சோஷலிச கொள்கையின் அடிப்படையில் கட்டியெழுப்படும் மக்கள் நேயமுள்ள ஆட்சியியேயாகும். அதற்காக பிரம்மாண்டமான மக்கள் சக்தி தேவையென வலியுறுத்துகின்ற இந்த 7வது தேசிய மாநாடு அதன் பிரதானமான செயற் பொறுப்பாக தற்போதய முதலாளித்துவ ஆட்சியால் ஒடுக்குமுறைக்குள்ளாகி அதற்கு எதிராக போராடும் சகல சக்திகளையும், அமைப்புகள் மற்றும் தனிநபர்களை ஒன்றிணைக்கவும், சகல போராட்டங்ளையும் ஒன்றிணைத்து அதற்கு திடமாக தலைமைத்துவத்தை பெற்றுக்கொடுப்பதற்கு விரிவான மக்கள் போராட்ட முன்னணியை அமைக்க வேண்டுமென முன்மொழிகிறது.

02. மேற்காணும் குறிக்கோளை அடைவதற்காக, விரிவான வெகுஜன இயக்கத்தின் தேவையை நிறைவேற்றுவதற்காக, தேர்தல் களத்தில் சகல முற்போக்கு, தேசப்பற்றுள்ள மற்றும் சோஷலிச சக்திகளை ஒன்றிணைக்க கூடிய பலம்வாய்ந்த தேர்தல் முன்னணியொன்றை மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையில் கட்டியெழுப்ப வேண்டுமென இம் மாநாடு முன்மொழிகிறது.

03. இலங்கையில் தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்புவதற்கு முதலாளித்துவ முறை தோல்வி கண்டுள்ளமை இப்போது நன்கு நிரூபணமாகியுள்ளது. முதலாளித்துவ முறை இப்போது இனங்களுக்கிடையிலான மத கலவரங்களை தடுப்பதற்குப் பதிலாக தமது வர்க்கத் தேவைகளுக்காக அவைகளை தூண்டுவதிலேயே முனைப்பு காட்டி வருகிறது. அதனால் இனவாதம், மதவாதம் மற்றும் பிரிவினைவாதத்தை தோற்கடிப்பதற்காகவும் தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்புவதற்காகவும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் செயற்பாடுகளையும் முன்னெடுக்க வேண்டுமென முன்மொழியும் இந்த 7வது தேசிய மாநாடு அதற்காக வடக்கு கிழக்கு பிரதேசங்களில் மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கு கூடிய கவனம் செலுத்து வேண்டுமெனவும் “தேசிய பிரச்சினை தீர்வுக்கான அணுகுமுறை” எனும் பெயரில் வெளியிடப்பட்டுள்ள முன்மொழிவுகளை சமூக மயமாக்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமெனவும் முன்மொழிகிறது.

04. தற்போது இலங்கைக்கு எதிராக செயற்பட்டு வருகின்ற வெளிநாட்டுத் தலையீடுகளை தடுப்பதில் தற்போதைய ஆட்சியாளர்கள் தோல்வியடைந்துள்ளனர். அதற்குப் பதிலாக தற்போதைய ஆட்சியாளர் மனித உரிமைகளை மீறி, ஆர்பாட்டங்கள் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு நிராயுதபாணிகளை கொன்று, ஊடக நிறுவனங்கள் மற்றும் ஊடகவியலாளர்களைத் தாக்கி, கொன்று மற்றும் கடத்தி, ஜனநாயகத்தை பொருட்படுத்தாது எதேச்சதிகார ஆட்சியை முன்னெடுத்து, நீதித்துறையின் மீதும் கைவைத்தும், வடபகுதி மக்கள் மீது பலாத்காரத்தை கட்டவிழ்த்துவிட்டு, பொய் நாடகமாடி வெளிநாட்டுத் தலையீடுகளுக்கு தேவையான சூழலை நிர்மாணித்து வருகிறது. இது பாரதூரமான நிலைமையென காணும் இந்த 7வது தேசிய மாநாடு அரசாங்கத்தின் இப் போக்குகளை மிக வண்மையாக கண்டிக்கிறது. அதேபோன்று உலகம் முழுவதிலும் நாடுகளை ஆக்கிரமித்து, போரை கட்விழ்த்துவிட்டும் மக்களை கொன்றொழிக்கும் ஏகாதிபத்தியம் இலங்கையில் மனித உரிமைகளைப் பற்றிப் பேசி இலங்கைக்கு எதிராக மேற்கொள்ளும் பலவந்தமான தலையீடுகளை மிக வன்மையாக கண்டிக்கும் இந்த 7வது தேசிய மாநாடு அந்த ஏகாதிபத்தியத்தின் தலையீட்டை தோற்கடிப்பதற்கும், அதற்கு வழி சமைக்கின்ற தற்போதைய அரசாங்கத்தின் ஜனநாயக விரோத தான்தோன்றித்தனமான நடவடிக்கைகளை தோற்கடிப்பதற்கு அணிதிரளுமாறு சகல ஏகாதிபத்திய விரோத உண்மையான தேசப்பற்றாளர்கள் மற்றும் முற்போக்கு சக்திகளிடம் கேட்டுக் கொள்கிறது.

05. ஐக்கிய தேசிய கட்சியால் 1978ல் அறிமுகப்படுத்திய நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறை இலங்கையின் ஜனநாயகத்திற்கு பாரிய அழிவினை ஏற்படுத்தியுள்ளது. தற்போது அந்த அதிகாரத்தை தன்வசம் வைத்திருக்கின்ற ராஜபக்ஷ அரசாங்கம் அதை இரத்துச் செய்வதற்காக அளித்த வாக்குறுதிகளை வெட்கமின்றி பட்டப்பகலியே மீறியுள்ளதோடு நிற்காது, 18வது திருத்த சட்டத்தின் மூலமாக அப்பதவிக்கான இரண்டு தடைவை கால எல்லையையும் நீக்கியுமுள்ளது. மற்றும் சுயாதீனமான ஆணைக்குழுக்ளையும் செயலிழக்கச் செய்து எதேச்சதிகார, தான்தோன்றித்தனமான சர்வாதிகார குடும்ப ஆட்சியை கட்டியெழுப்ப ஆரம்பித்துள்ளது. அதன் கீழ் நீதிமன்றம், பொலிஸ், அரசசேவைகளை தமது குடும்பத்தின் கட்டுபாட்டிற்குள் கொண்டு வந்துள்ள தற்போதைய ஆட்சியாளர்கள் போதைபொருள், எத்தனோல், ஆகியவைகளை இறக்குமதிச் செய்து கள்ளச் சாராய உற்பத்திக்கும் வினியோகத்திற்கும், கெசினோக்களுக்கு சட்டவிரோதமாக பணம் சம்பாதிப்பதற்கும், அரச அனுசரனையை வழங்கி வருகிறது. நாட்டின் சட்டத்தை சீரழித்து தமக்கு சார்பான குற்றவாளிகளுக்கு விடுதலையளித்து எதிர்ப்பாளர்களுக்கு எதிராக அடக்குமுறையை கட்டவிழ்த்துவிட்டும், தொடர்ச்சி 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலத்தின் அமெரிக்கா சமாதான வலயமாகிறது



இலத்தின் அமெரிக்கா மற்றும் கர்பியன் இராஜ்சியங்கள் சங்கத்தின் இரண்டாவது மாநாடு கடந்த ஜனவரி 28 -29 இருதினங்களாக கியூபாவில் ஹவான நகரத்தில் நடைபெற்றது. அது கியூபாவின் ஆன்மீகத் தலைவர் ஜோசே மார்ட்டியின் 161 வது பிறந்த தினத்திலாகும்

இம் மாநாட்டின் தொனிப்பொருளாக, சமத்துவமின்மைக்கு பட்டினி மற்றும் வறுமைக்கு எதிராக போராடுவோம்.' என்பதாகும். இம்மாநாட்டிற்கு ஈக்குவதோர், வெனிசூலா, நிக்கரகுவா, ஆர்ஜன்டினா, மற்றும் சங்கத்தின் அனைத்து நாட்டுத் தலைவர்களும் கலந்துக் கொண்டனர்.

இம்முறை மாநாட்டின் இலத்தின் அமெரிக்கா மற்றும் கர்பியன் நாடுகளின் பிராந்தியத்தியன் சமாதான வலயமாக அறிவிக்கப்பட்டது. பிராந்தியத்தின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அதிகாரத்தை பிரயோகிப்பதற்குப் பதிலாக கல்ந்துரையாடல் மற்றும் கருத்துப் பறிமாற்றத்தின் மூலமாக பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முடிவு செய்யப்பட்டது. பிரித்தானியா மற்றும் அமெரிக்க இப் பிராந்நதியத்தில் அமைத்துள்ள இராணுவ முகாம்களை அகற்றுவதற்கும் அணு ஆயுதங்களுடனான சப்மெரின்களின் போக்குவரத்தை தடுத்து நிறுத்துவதற்கும், அமெரிக்காவின் 04வது கடற்படையை அகற்றுவதற்கும் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதேபோன்று போக்லாந்து தீவுகளுக்கான ஆஜென்டினாவுக்கு இருக்கும் உரிமையை வலியுறுத்தப்பட்டது. அதேபோன்று கியூபாவுக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள பொருளாதார தடையை நீக்கும்படியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# சீனா வர்த்தகத்தில் அமெரிக்காவை தோற்கடித்துள்ளது



2013ம் ஆண்டில் அமெரிக்காவை தோற்கடித்து விட்டு, சீனா உலக வர்த்தகத்தில் முதன்மையான நாடாக வளர்ந்துள்ளது. சீகவால் வெளியிட்ட அறிக்கையின் படி கடந்த வருடம் அந்நாட்டின் ஏற்றுமதி இறக்குமதியின் அளவு 4.16 வீத டொலர் பில்லியன்களாகும். 2013 நவம்பர் வரையில் அமெரிக்காவின் மொத்த ஏற்றுமதி இறக்குமதி வீதம் 3.5 டெ-ாலர் பில்லியன்களாகும். (டிசம்பர் மாத விபரங்கள் இன்னும் வெளியாகவில்லை) ஏற்றுமதி இறக்குமதிகளை இணைத்தாலும் கூட அமெரிக்காவால் சீனவை கடந்துவிட முடியாதென பொருளி யல் வல்லுனர்கள் தெரிவிக்கின்றனர்.

2012 ம் ஆண்டிற்கு ஒப்பிடாக சீனாவின் வர்த்தகம் 7.6 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. அதற்கிணங்க உலக வர்த்தகத்தில் 10 வீதத்தை சீனாவால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. இன்றைக்கு ஒரு தசாப்பதங்களுக்கு முன்னர் அது 5 சதவீதமாகும்.

2013 நவம்பர் டிசம்பர் மாதங்களில் சீனாவில் ஏற்றுமதி பாரி ய வீழ்ச்சிக்கு உள்ளானது. அவ்வாறான போதிலும் சீனாவில் பொருளாதார வளர்ச்சி வேகம் 7.6 சதவீதமாக இருப்பதாக அதிகார பூர்வமற்ற அறிக்கைகள் தெரிவிக்கிறது.

# கெரில்லாத் தலைவர் ஜனாதிபதியாக!



எல்சல்வடோரில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் பெரபுண்டோ மார்ட்டி தேசிய விடுதலை முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சல்வதோர் சான்வேஸ் வெற்றி பெறுவாரென அரசியல் ஆய்வாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

எல்சல்வடோரில் ஜனாதிபதித் தேர்தல் 2014 பெப்ரவரி மாதம் 2ம் திகதி நடைபெறவுள்ளது. அத் தேர்தலில் மூன்று வேட்பாளர்கள் களத்தில் குதித்துள்ளனர். தேசி யவாத குடியரசு கூட்டமைப்பை பிரதிநிதித்துவம் செய்யும் நோமன் குயிஜானோ, தேசிய ஒற்றுமைக்கான கூட்டணியில் அன்தோனியோ சாகா ஏணைய இருவராகும்.

பெரபுண்டோ மார்ட்டி தேசிய விடுதலை முன்னணியை பிரதிநிதித்துவம் செய்யும் சல்வதோர் சான்வேஸ் இப்போது அந்நாட்டின் உப ஜனாதிபதியாவார். சில காலத்திற்கு முன்னர் அவர் அவ்வமைப்பின் கெரில்லாத் தலைவராக செயற்பட்டவராவார். பெரபுண்டே மார்ட்டி தேசிய விடுதலை முன்னணி 1990களில் ஆயுத போராட்டத்திலிருந்து தேர்தல் செயற்பாட்டிற்கு பிரவேசித்திருப்பதுடன் இப்போது அந்த கட்சியே அந்நாட்டு அதிகாரத்தில் இருக்கிறது.

# தொழில் அற்றவர்களின் உலகம்





2013ம் வருடத்தில் உலகம் முழவதிலும் வேலையில்லாதோரின் எண்ணிக்கை 202 மில்லியன்களென உலகத் தொழிலாளர் அமைப்பு தெரிவிக்கிறது. அதற்கிண்க உலகத்தில் வேலையில்லாதோர் தொகை 6 சதவீதமாக அதிகரித்துள்ளது.

2013 ஆம் ஆண்டு மட்டும் வேலையில்லாதேரின் தொகையில் மேலும் 5 மில்லியன்கள் சேர்ந்துள்ளது. உலக பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட 2008 ம் ஆண்டு முதல் இன்று வரையில் வேலையில்லாதோர் தொகையில் புதிதாக சேர்ந்துள்ளளோரின் தொகை 23 மில்லியன்களாகும்.

உலக பொருளாதார நெருக்கடி சமனநிலையடைந்துள்ளதாக கூறப்பட்டப் போதிலும் இன்னமும் போதுமான தொழில் வாய்ப்புகள் ஏற்படுத்தப்படவில்லையென்பது இந்த புள்ளி விபரங்கள் தெரிவிக்கிறது.

# இன்னுமொரு வீரர் விடுதலைக்கான அறிகுறி




அமெரிக்காவினால் அநீதியான முறையில் சிறை வைத்திருக்கும் 05 கியூப வீரர்களின் ஒரவறான பெர்னன்டு கொன்ஸாலேசை பெப்ரவரி 27ம் திகதி விடுவிக்கப்படுவாரென அவரது சட்டத்தரணி இராகுர்ஸ்பான் தெரிவிக்கிறார். பெர்னன்டு கொன்ஸாலேசை கடந்த 15 வருடங்களாக அமெரிக்காவில் அநீதியான முறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவருக்கு 19 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கியூப வீரர்கள் ஐவரின் விடுதலைக்காக உலகம் முழுவதிலும் இடம்பெற்ற ஆர்பாட்டங்களின் பலனாக-வே அமெரிக்காவால் அவர்களை விடுதலை செய்வதற்கு நேர்ந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனியார் தோட்டத் தொழிலாளர் சம்பள பிரச்சினை பற்றி

### தொழில் அமைச்சருடன் பேச்சுவார்த்தை



கடந்த 29ம் திகதி அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தல்லவர் தோழர் இராமலிங்கம் சந்திரசேகர் தொழில் அமைச்சர் காமினி லொக்குகேயுடன் பேச்சுவார்த்தையொன்றை நடத்தினார். அப்பேச்சுவார்த்தைக்கான காரணம் 2013 ஏப்ரல் மாதம் 03ம் திகதி தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்புக்கான கூட்டு ஒப்பந்தம் செய்யப்பட்டு 380 ரூபாவாக இருந்த நாட் சம்பளம் 460 ரூபாவாக அதிகரிக்கப்பட்டது. ஆனால் தனி தோட்டங்களில் தொழில் புரியும் ஒரு இலட்ச்சத்திற்கும் அதிகமான தோட்டத் தொழிலாளர்களுக்கு இது நாள்வரையில் சம்பளம் அதிகரிக்கப்படவில்லை. அதனால் அவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். அதனால் அவர்களுக்கு உடனடியாக சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டுமென தொழில் அமைச்சரிடம் கேட்டுள்ளார்.

அது தற்போது சம்பள நிர்ணய சபையில் பேச்பட்டு வருவதால் பேச்சுக்கள் முடிந்து அவர்கள் ஒரு முடிவுக்கு வந்தவுடன் தான் சம்பளத்தை அதிகரிப்பதற்கான வர்த்தமாணியை பிரசுரிப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

அதன்போது இராமலிங்கம் சந்திரசேகர் தொழில் அமைச்சர் என்ற வகையில் உங்களுக்கு பாரிய பொறுப்பு உள்ளதாகவும் நீங்கள் அழுத்தங்களை பிரயோகித்தால் தனியார் தோட்ட உரிமையாளர்கள் சம்பளத்தை அதிகரிப்பதற்கு ஏதுவான நடவடிக்கைகளை துரிதப்படுத்துவார்கள் என்றும் சுட்காட்டியுள்ளார்.

## வரவு செலவின் அநீதி



எந்தவொரு உணர்வுகூர் பொருளில் உள், வெளி முரண்பாடுகளால் உணர்வுகூர பொருளின் தன்மையில் மற்றமடையலாம். ராஜபக்ஷ ஆட்சியெனும் உணர்வுகூர் பொருளில் இன்று ஏற்பட்டிருப்பது அதன் உள்ளக முரண்பாடுகள் உக்கிரமடைவதன் காரணமாக மாற்றங்களை நோக்கி நகர்கிறது. அதற்கான அண்மித்த உதாரணங்களாக பிரதேச சபைகளில் வரவு-செலவு தோல்வியாகும். இது ராஜபக்ஷ குடும்ப ஆட்சிக்கு எதிராக அரசாங்கத்தின் உள்ளக கிளர்ச்சியென்றும் கூறமுடியும். ஜனாதிபதி ராஜபக்ஷவின் கட்டளைகளையும் கவனத்திலெடுக்காது சில பிரேதச, நகர சபைகளின் உறுப்பினர்கள் செயற்பட்டனர். இடைவிடாத போராட்டமாக நிகழ்ந்துக் கொண்டிருக்கும் இந்த வரவு-செலவு தோல்வியை தவிர்ப்பதற்காக அரசாங்கம் பல்வேறு வியூகங்களை வகுத்து செயற்படுத்தி வருகிறது. வரவு செலவுக்கு எதிராக வாக்களிப்போரை வாக்களிக்க விடாது தடுப்பதற்கான நடவடிக்கை, வாக்களிக்க வரும்போது கடத்தப்படல், மரண அச்சுறுத்தல், இவைறான தந்திரோபாயங்களாகும். இந்த வாக்கெடுப்பின் போது ஜே.வி.பி உறுப்பினர்களுக்கு பல்வேறு நெருக்கடிகளை சந்திக்க நேரிட்டுள்ளது. உள்ளூராட்சி சபைகளின் வரவு செலவு வாக்கெடுப்பின்போது உறுப்பினர்கள் சந்திக்க நேரிட்ட அநீதிக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணியின் பாரிய குரல் கொடுத்தும், அதற்கெதிரான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தது. இதன் ஒரு அங்கமாக கடந்த ஜனவரி 13ம் திகதி மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறைபாடொன்றை தாக்கல் செய்தது. இந்த சந்தப்பத்திற்கு கம்பகா மாவட்ட மாகாணசபை முதன்மை வேட்பாளர் மகிந்த ஜயசிங்க சட்டதரணி லால் குமாரபேலி, பீ.ஜ ஆப்தீன், வத்தளை பிரதேச சபை ஊறுப்பினர் ஜுட் கிரிஸ்டோபர் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

## 2013 இல் தேயிலை உற்பத்தி 339 மில்லியன் கிலோ!

### வருமானம் 1.6 பில்லியன் ரூபா மக்களுக்கு நிவாரணம் எங்கே?



நாட்டில் 2013 ஆம் ஆண்டில் 339 மில்லியன் கிலோ தேயிலை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. தேயிலை உற்பத்தி வரலாற்றுடன் ஒப்பிடுகையில் இது பாரிய சாதனையாகும். இதன்மூலம் நாட்டுக்கு 1.6 பில்லியன் ரூபா இலாபம் கிடைத்துள்ளதாக தெரியவருகிறது.

மேலும் தெரிவருவதாவது 2012 ஆம் ஆண்டில் 328 மில்லியன் கிலோ தேயிலையே உற்பத்தி செய்ய முடிந்தது. தேயிலை செய்கைக்கு வழங்கப்படுகின்ற உர மானியம் காரணமாகவே தேயிலை உற்பத்தி அதிகரித்துச் செல்வதாக அண்மையில் பஷில் ராஜபகஷ குறிப்பிட்டுள்ளர். ஆனால் அந்த உற்பத்திக்காக தன்னுயிரை தியாகம் செய்தவர்களான தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கையில் மாற்றங்கள் நிகழவில்லை.

2013 ஆம் ஆண்டு 70 சதவீதமான தேயிலை சிறு தேயிலை உரிமையாளர்களினாலேயே உற்பத்தி செய்யப்படுகின்றது. சிறு தேயிலை தோட்டங்களுக்கு பல்வேறு வசதிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. இலங்கையின் தேயிலைக்கு உலகம் முழுவதும் உயர்வான கிராக்கி ஏற்பட்டுள்ளது.

தேயிலை செய்கைக்கு நிவாரணமாக ஒரு ஹெக்டெயருக்கு 350000 ரூபா வழங்கப்பட்டுள்ளது. 3500 ரூபா பெறுமதியான 50 கிலோ கொண்ட உரம் 1500 ரூபாவுக்கு வழங்கப்படுகின்றது.

ஒரு காலத்தில் ஒரு கிலோ தேயிலை கொழுந்தின் விலை 25 ரூபாவாக குறைவடைந்தது.

இலங்கையை பொறுத்தவரையில் 206104 ஹெக்டெயர் நிலத்தில் தேயிலை உற்பத்தி செய்யப்படுகின்றது. அவற்றில் 70 சதவீதமானவை சிறுதேயிலை தோட்ட உரிமையாளர்களினால் முன்னெடுக்கப்படுகின்றன. அதாவது 397223 சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களினால் தேயிலை உற்பத்தி செய்யப்படுகின்றது.

சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களினால் 120664 ஹெக்டெயர் நிலத்தில் தேயிலை உற்பத்தி செய்யப்படுகின்றது. சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களினால் 15 இலட்சம் பேர் தங்கிவாழ்கின்றனர். இலங்கையில் தனி நபர் தேயிலை பாவனையானது 1.3 கிலோ கிராமாகும். 14 மாவட்டங்களில் சிறு தேயிலை உற்த்தியாளர்கள் தேயிலை உற்பத்தியில் ஈடுபடுகின்றனர். இரத்தினபுரி காலி மாத்தறை போன்ற மாவட்டங்கள் அவற்றில் முன்னணியில் உள்ளன.

## 25 நாட்கள் வேலை வழங்கப்பட வேண்டும் இல்லையேல் அதற்குரிய சம்பளத்தை வழங்கவும்!

கூட்டு உடன்படிக்கையின் சரத்துக்களுக்கு அமைவாக தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதமொன்றுக்கு 25 நாட்கள் வேலை வழங்கப்பட வேண்டும். இவ்வாறு வேலை வழங்கப்படாவிட்டால் குறித்த 25 நாட்களுக்குரிய சம்பளத்தை மாத முற்பணமாக வழங்க வேண்டியது தோட்ட நிர்வாகத்தின் பொறுப்பாகுமென அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம் தொவிக்கிறது.

இது குறித்து அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் உப செயலாளர் தோழர் செல்வராஜா மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தோட்டத் தொழிலாளர்களின் வேலைப்பளுக்களை கூட்டுவதும், வேலை நாட்களைக் குறைப்பதும், கூட்டு ஒப்பந்தத்திற்கு மாறாக அமைகின்றது. இதேவேளை அடைமழை ஆகியவற்றாலும், வேலை நாட்கள் குறைக்கப்படுகின்றன. இதனால், தொழிலாளர்கள் பெரிதும் பாதிப்படைந்து எதிர்பார்க்கப்பட்ட சம்பளத் தொகையை பெற முடியாமல் அவதியுறும் நிலை ஏற்பட்டுள்ளது. சீரற்ற காலநிலையினை கருத்திற்கொண்டு தோட்டக் கம்பனிகள் ஒவ்வொரு விடுபட்ட 25 நாட்களுக்குரிய சம்பளத்தை முற்பணமாக வழங்க வேண்டும். முற்பணமாக வழங்கப்பட்ட இத்தொகையினை அடுத்தடுத்த மாதங்களில் வேலை செய்யும் நாட்களைக் கணக்கிலிட்டு அதற்கேற்றவாறு ஒரு குறிப்பிட்ட தொகையை தொழிலாளர்களிடமிருந்து அறவீடு செய்து கொள்ள முடியுமென்றும்.

தற்போது குறிப்பாக 2013 ம் ஆண்டு தேயிலை உற்பத்தி அதிகரித்திருப்பதாகவும், தேயிலை விலையும் அதிகரித்து தோட்டக் கம்பனிகள் பெரும் இலாபத்தை ஈட்டி வருதாகவும் ஆனால் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையோ மேலும் பின்தள்ளப்பட்டு தொழிலாளர் பாரிய பொருளாதார கஷ்டங்களை எதிர்நோக்கியிருப்பதாகவும், அதனால் தோட்டத் தொழிலாளர்களுக்கு உரிய நிவாரணங்களை வழங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7ம் பக்கம் இந்த கட்சியே எமது உயிர். சாவதும்

அரசாங்கத்தின் பெறுப்பாகும். அப்படி நடக்காவிட்டால் அரசாங்கத்திற்கு எதிராக வழக்குத் தொடுக்க முடியும். அதேபோன்று சுகாதார துறையை எடுத்துகொண்டாலும், இன்று சுகாதாரத்திற்கு ஏற்பட்டிருப்பதென்ன? கர்ப்பிணித் தாய்மார்களில் 22 சதவ-தமானோர் இரத்தச் சோகையால் பீடிக்கப்பட்டுள்ளனர். பிள்ளைகளை பெற்றெடுக்கும் 5/1 தாய்மார்களில் இரத்தமின்மையால் வாடுகின்றனர். அப்படியானால் பிள்ளைகளின் நிலை என்ன? பிள்ளைகளில் பெருந்தொகையானோர் போஷாக்கின்மையால் வாடுகின்றனர். அப்படியானால் நமது நாட்டின் நிலை என்ன?

எமக்கு இப்படி நடக்கும் போது அவர்களுக்கு அப்படி நடக்காது. அவர்கள் சிகிச்சைபெறுதற்கு சிங்கபூரில் உள்ள எலிஸபெத் வைத்தியச் சாலைக்கு போகிறார்கள். ஜனாதிபதி சிகிச்சைப் பெறுவதற்கு அமெரிக்காவில் தன குவேரர்கள் செல்லும் அதிக விலை கொடுக்கும் வைத்தியச்சாலைக்கே சென்றார். அவர்களது உயிர் மட்டுமா உயிர், நமது உயிர்கள் உயிர் இல்லையா? அவர்களது பிள்ளைகள் மட்டுமா பிள்ளைகள்? நமது பிள்ளைகள் பிள்ளைகள் இல்லையா? அனைவரும் இந்நாட்டுப் பிள்ளைகள் என்று கருதும் ஒரு சமூகத்தை கட்யெழுப்பக் கூடாதா? அதனால் அனைத்து பிள்ளைகளும் ஆரோக்கியமான பிள்ளைகளாக மாற்றுவதற்கான பொறுப்பு அரசாங்கத்தின் பொறுப்பாகும். அந்த பொறுப்பினை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். எமது நாட்டை தொழில்மயமாக்கபட வேண்டும். கடந்த 66 வருடங்களாக நாடு நாசமாக்கப்பட்டுள்ளது. உலகத்தில் தொழில்நுட்பம் வளர்ந்துச் செல்கிறது. அறிவு வளர்ந்துள்ளது. எமது நாடு அதற்குப் பின்னால் ஆமை வேகத்தில் நகர்கிறது. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் உலகத்தில் பல மடங்கு தொழில்நுட்பம் வளர்ந்துள்ளது. எம்மால் அதை நெருங்க கூட முடியவில்லை. அரிசி உற்பத்தியில் நாடு தன்னிறைவு அடைந்திருப்பதாக அரசாங்கம் கூறுகிறது. வயலை உழுதும் டெக்டர் வெளிநாட்டில், டெக்டருக்கு ஊத்தும் எரி பொருள் வெளிநாட்டில், மருந்துவகைகள் வெளிநாட்டில், நெல் நிறப்பும் சாக்கு, நெல் அறைக்கும் ஆலை, அரிசி அளக்கும் தராசு, சோறு சமைக்கின்ற அடுப்பு, சோறு பரி மாறும் கரண்டி எல்லாமே வெளிநாட்டை சார்ந்தது சோறு சாப்பிடும் வயிறு மட்டுமே இலங்கை உற்பத்தி. இதையா விவசாயத் துறையென்பது? இதனால் விவசாயத்துறைக்கு, கடற்தொழிலுக்கு, தேவையான தொழிற்சாலைகளை உருவாக்கு வேண்டும். நவீனமயமாக்க வேண்டும். எமது பொருளாதார கொள்ளையானது உயரிய மனித வளத்துடனான நவீனமயமான தொழிற்துறையை கொண்ட நாடு,? அதேபோன்று நியாயமான சமூகமொன்றும் இருந்ததாக வேண்டும். அடிமை கோழை மனிதனுக்குப் பதிலாக அடிமையற்ற மனிதனை உருவாக்க வேண்டும். பிள்ளையை பாடசாலையில் சேர்ப்பதற்கு, வீதிகளை அமைத்துக் கொள்வதற்கு, அரசியல்வாதியின் பின்னால் ஓட வேண்டும். அதனால் எமக்கு ஆளுமையுள்ள மனிதன் வேண்டாமா? அபிமானத்துடனான அடிமையற்ற மனிதனே எமது எதிர்பார்ப்பு.

அதனால் இன்று 7வது மாநாட்டிலிருந்து வெளியேறும்போது துஷ்டத்தனமான முதலாளித்துவ முறைக்கு எதிராக , நவீன சோஷலிசத்தின் அடிப்படையிலான பொருளாதார முறைக்கு அடித்தளமிட்டுள்ள எழுத்துமூல வேலைத் திட்டத்துடனாகும். நாளை முதல் இந்நாட்டின் கருத்தாடலாக அமைய வேண்டியது இத்திட்டமாகும். இந்த நாட்டை கட்டியெழுப்பக் கூடிய பாதை இருக்கிறது. அந்த நோக்கு மக்கள் விடுதலை முன்னணியிடம் மாத்திரமே இருக்கிறது. அந்த நோக்குறகாக புதிய மத்திய குழுவும் தெரிவு செயய்யப்பட்டுள்ளது. நாம் எல்லோரும் கூட்டு பொறுப்பாக கொண்டு கட்சியை முன்னோக்கி கொண்டுச் செல்வதற்காக பாடுபடுகிறோம், கஷ்டப்படுகிறோம். தந்திரோபாய மூலோபாயங்களை வகுக்கின்றோம். இதை உங்களுக்கு உறுதியளிக்கிறேன். தோழர் ரோகண விஜேவீர கட்டியமைத்த அபிலாசைகள், சிறைச்சாலைகளில் பல்வேறு துன்பங்களை அனுபவித்து இறக்கும்போதும் சகோதர, சகோதரிகளுக்கு இருந்த அபில-ாசைகள் எதிர்பார்ப்புகளை இந்த மண்ணில் நிலைநாட்டும் வரையில் இந்தக் கட்சியோடு முன்னோக்கிச் செல்வேன். இந்த கட்சியே எமது உயிர். சாவதும் இந்தக் கட்சிக்காவே.


## 5ம் பக்கம் மாற்றத்தை கோருகின்ற

அரசாங்கம் முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளது. இப்போது செலுத்தப்படாத வரியை அறவிடுவதற்கான நீதிமன்றத்தை அமைத்திருப்பதிலிருந்து இது மேலும் நிரூபணமாகிறது. அவற்றை மக்கள் எந்தளவுக்கு தாங்கிக் கொள்வார்களென்று எவராலும் எதிர்வு கூற முடியாது.

இந்த நெருக்கடிக்கு தீர்வினை உற்பத்தி பொருளாதாரத்தில் மட்டுமே காண முடியும். விஞ்ஞானத்தையும் தொழில் நுட்பத்தையும் சரியான முறையில் பயன்படுத்தும், தொழில் துறையை அடிப்படையாக கொண்ட உற்பத்தி பொருளா-தாரமெனும் அதாவது நவீன சோஷலிச பொருளாதாரத்தை கட்டியெழுப்பியாக வேண்டும். அப் பொருளாதாரத்திற்கு மக்களின் பங்களிப்பினை பெற்றுக் கொள்ள வேண்டும். அதேபோன்று அதன் பயன்பாடுகளை மக்களுக்கு நியாயமான முறையில் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும். சமூக நீதி, ஜனநாயகம், தேசிய ஒற்றுமை, மற்றும் உண்மையான தேசிய விடுதலையை அடைய முடிவதும் அவ்வாறான சமூகத்திலாகும். அதற்காக கொள்கைத் திட்டமொன்றையும், வேலைத்திட்டத்தையும், மற்றும் செயற்பாடுகளையும் முன்னெடுக்க வேண்டும். மக்கள் விடுதலை முன்னணி 7வது தேசிய மாநாட்டை நடத்தியது அதற்காகவாகும்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியும் பின்னடைவும் ஏற்பட்ட உடனே அதை பார்த்து பிடல் கஸ்ட்ரோ கூறியதாவது, "இந்த நெருக்கடியின் உண்மை நிலை பற்றி அறிவும், கூடுதலான அரசியல் கூருணர்வும், கூடுதலான கிளர்ச்சித் தன்மையும், கூடுதலான புரட்சிகளையும் கொண்டு வரும்." என்று அவர் குறிப்பிட்டார். அதற்கிணங்க இலங்கையின் தற்போதைய நெருக்கடியும் நாட்டிற்கு அதற்கான சந்தாப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. அந்த சந்தர்ப்பத்தை வீணாக்காமல் சமூக மாற்றத்திற்காக பயன்படுத்துவது நமது கடமையாகும். அதற்காக மக்களை தெளிவுபடுத்த வேண்டும். ஒழுங்கமைக்க வேண்டும். அவை அனைத்திற்காக வர்க்கத்தின் முன்னணி படைகளை தயார்படுத்த வேண்டும். புதிய நிலைமைகளுக்கு ஏற்றவாறு புதிய தந்திரோபாய மூலோபாயங்களை வகுக்க வேண்டும். அதற்காக தாம் மாற்றமடைவதற்கு தயார் என்று வர்க்கத்தின் கட்சி நடைமுறையில் காட்ட வேண்டும். இது அதற்கான காலமாகும்.

## 8ம் பக்கம் மக்கள் விடுதலை முன்னணியின்



அச்சுறுத்தல் விடுத்தும் இலங்கையின் முழ சமூக உடலையும் தான்தோன்றித்தனமான எதேச்சதிகார ஆட்சிக்கு அடிபணிய வைத்துள்ளது. அதனுல் ஜனநாயகம், நீதி, நல்லாட்சி, போன்றன வெறும் வெற்று வார்த்தைகளாக மாற்றியுள்ளது. ராஜபக்ஷவின் ஆட்சி நாட்டில் தோற்றுவித்திருக்கும் இந்த ஜனநாயக விரோத, தான்தோ்றித்தனமான, எதேச்சதிகார குடும்ப ஆட்சியை உடனடியாக மாற்றியமைக்க வேண்டுமெனவும், மீண்டும் அவ்வாறானதோர் ஆட்சிக்கு இடமளிக்க கூடாதெனவும் வலியுறுத்துகின்ற இந்த 7வது தேசிய மாநாடு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையையும், குடும்ப ஆட்சிக்கும் முடிவுகட்டி நல்லதோர் சமூகத்தை கட்டியெழுப்பக் கூடிய சகல சக்திகளையும் ஒன்றிணைத்த பொது அரசியல் செயற்பாட்டினை கட்டியெழுப்புவதற்கும் மக்கள் சக்திகளை பலப்படுத்துவதற்கும் அதற்கு தமது தலைமைத்துவத்தை வழங்குவதற்கும் மக்கள் விடுதலை முன்னணி தலையிட வேண்டுமென முன்மொழிகிறது.

06. அமெரிக்க ஏகதிபத்தியம் உள்ளடங்கலாக ஏகாதிபத்தியம் தெற்காசிய பிராந்திய நாடுகள் மீதான தமது உள்ளக தலையீடுகளை அதிகரித்திருக்கிறது. இந்து சமுத்திரத்தில் சர்வதேச கடற் பாதையை தீர்மானகரமான சந்தர்ப்பங்களில் ஏனைய நாடுகள் பயன்படுத்துவதை தடுக்கும் நோக்குடன் தனது போர் வியூகத்தை பிராந்திய அதிகார சமநிலைக்கும் சமாதானத்திற்கு அச்சுறுத்தல் அமையும் வகையில் மாற்றியுள்ளது. தெற்காசிய பிராந்திய நாடுகளில் உள்ளக பிரச்சினைகளில் தலையிடுவதும் பிராந்திய அதிகாரச் சமநிலைக்கும் சமாதானத்திற்கும் அச்சுறுத்தல் ஏற்படும்விதமாக தனது யுத்த தந்திரோபாயத்தை தீவிரப்படுத்துவதற்கு எதிராக அணிதிரளும்படியும், அமைப்பு ரீதியாக போராடும் படியும் மக்கள் விடுதலை முன்னணியின் இந்த 7வது தேசிய மாநாடு தெற்காசிய பிராந்தியத்தின் சகல நாடுகளிலும் வாழும் சோஷலிச முற்போக்கு தேசப்பற்றுள்ள மக்களுக்கு அறை கூவல் விடுக்கிறது.

07. பாலஸ்தீனம், ஈராக், லிபியா, யேமன், சிரியா போன்ற நாடுக-ளில் தீச்சுவாலையை ஏற்றி அந்நாடுகளை சுடுகாடாக மற்றியிருக்கும் போர் வெறிபிடித்த ஏகாதிபத்திய , சியோனிஸ அசுத்த கூட்டணி முழு மத்திய கிழக்கையும் யுத்தக் காடாக மாற்றுவதற்காக முன்னெடுக்கப்படும் கொலை-லகார முயற்ச்சியை கண்டிக்கும் மக்கள் விடுதலை முன்னணி மத்திய கிழக்கு பிராந்தியத்தின் முற்போக்கு, ஜனநாயக, மனிதாபிமான மக்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் ஏகாதிபத்திய எதிர்ப்பு விடுதலை போராட்டத்திற்கு நிபந்தனையற்ற ஆதரவினை தெரிவிக்கிறது. அதேபோன்று சோஷலிச கியூபாவுக்கு, வட கொரியாவுக்கு எதிராக அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் உள்ளிட்ட ஏகாதிபத்திய நாடுகளால் கொண்டுச் செயல்ப்படும் பொருளாதார தடை, இடையூறு மற்றும் அச்சுறுத்தலை கடுமையாக கண்டிக்கும் இம்மாநாடு அந்நாடுகளுக்கு தமது தோழமையுடனான ஆதரவினை தெரிவித்துக் கொள்கிறது.

08. மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உரைவிடம், மருந்து வகைகள், அறிவாற்றல், தொழில் தேவைகளை பூர்த்திச் செய்வதில் பாரிய நெருக்கடியை நோக்கி நகர்கின்ற முதலாளித்துவம் முற்றாகத் தோல்வியடைந்துள்ளதினை உலகம் முழுவதிலுமுள்ள முன்னேறிய பின்தங்கிய நாடுகள் அனைத்திலும் தெளிவுபட வெளிகாட்டியுள்ளது. இந்த நிலமைகளில் சோஷலிசத்தை வென்றெடுக்காது மனித குலம் முன்னோக்கிச் செல்வதை நினைத்துக் கூட பார்க்க முடியாது. அதனால் தனி தனித் நாடுகளாகாகவும் சர்வதேச ரீதியாகவும் சோஷலிச இயக்கத்தின் முன்னால் இருக்கும் சவாலை தோற்கடித்து பாரிய வெற்றிகளை அடைவதற்காக அமைப்பு ரிதியாக அணிதிரள வேண்டுமெனவும் போராட வேண்டுமெனவும் மக்கள் விடுதலை முன்னணியின் 7வது தேசிய மாநாடு முன்மொழிகிறது.

## முதலாம் பக்கம்
## ஜே.வி.பி யின் தலைவராக

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்யும் தோழர் அனுர திசாநாயக்க, 2004 - 2005 காலப்பகுதியில் விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்பாசன அமைச்சராக செயற்பட்டார். 1987 ஆம் ஆண்டு முதல் மக்கள் விடுதலை முன்னணியின் நீண்டகால செயற்பாட்டராகவும் மத்திய குழு மற்றும் அரசயில் குழுவின் நீண்டகால உறுப்பினருமாவார். அவர் களனி பல்கலைக்கழகத்தின் பட்டதாரியுமாவார்.

## நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான

யல் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு திட்டமின்றி பொய்யான வாக்குறுதிகளை வழங்கும் அரசியலில் ஈடுபட்டிருக்கும்போது மக்கள் விடுதலை முன்னணி தெளிவானதும் நிலையான கொள்கைத் திட்டத்தை நடைமுறைபடுத்தும் சவால் நிறைந்த அரசிலை தேர்ந்தெடுத்திருப்பது விசேடம்ஷமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# செஞ்சக்தி


மக்கள் விடுதலை முன்னணியின் உத்தியோகபூர்வ செய்தித்தாள்
464/20 பன்னிபிட்டடிவீதி பெலவத்த,பத்தரமுல்ல,இலங்கை
011-2785545, 0112785612
E-mail sensackthynews@gmail.com



# 07வது தேசிய மாநாடு

























...இல. 198/19 கொழும்பு 10ல் வசிக்கும் டில்வின் சில்வா அகிய என... [illegible] ...கொடை சரளா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org